REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுன் 19 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 143

Monday 19, June, 2023

12 பக்கங்கள்

50/-

## வெளிநாட்டு கடவுச்சீட்டு; நாளை முதல் புதிய திட்டம்

**கைரேகை எடுக்கும் பணி இன்று முதல்**



வெளிநாட்டு கடவுச் சீட்டு வழங்கும் புதிய திட்டத்திற்கான கைரேகைகள் எடுக்கும் பணி இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 51 பிராந்திய செயலகங்களில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக

07

## கொழும்பில் விரைவில் மின்சார பஸ்கள்

அமைச்சரவை அங்கீகாரமளித்தது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு நகரில் மின்சாரத்தில் இயங்கும் பஸ் வண்டிகளை சேவையிலீடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அதுதொடர்பில்

07

## வங்கிகள், நிதி பிரிவுகளின் ஸ்திரத்தன்மை; உறுதிப்படுத்துவதில் அரசு தீவிர கவனம்



**தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் இன்னமும் நிறைவடையவில்லை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இன்னும் நிறைவு பெறவில்லை என பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இரு தரப்பு கடன் உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட

07

## மின்சாரம், பெற்றோலியம், சுகாதாரம்; அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

**விசேட வர்த்தமானி மூலம் அரசாங்கம் அறிவிப்பு**



மின்சார விநியோகம், பெற்றோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யும் விசேட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி செயலாளரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

07




சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் விசேட நிகழ்வு ஒன்றை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர்களான பந்துல குணவர்தன, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் உட்பட பிரமுகர்களுக்கு தூதுவர் கோபால் பாக்லே ஞாபகார்த்த சின்னத்தை வழங்கி வைத்த போது எடுத்த படம்.

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி வரைபு பாராளுமன்றுக்கு



**TNA மற்றும் இராஜதந்திர வட்டாரங்களுக்கும் விடயங்களை தெளிவுபடுத்த முடிவு**

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்ததும் இவ்வருட டிசம்பர் முதல் நடைமுறைப்படுத்த அரசு கவனம் செலுத்துவதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இராஜதந்திர வட்டாரங்களுடன் அது தொடர்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். மேற்படி ஆணைக் குழுவின் வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்ததும் டிசம்பர் மாதம் முதல் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி வரைபு அடுத்த மாதம்

07

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

**இலங்கை குறித்த உயர்ஸ்தானிகரின் அறிக்கை புதனன்று**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை (19) ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கை புதன்கிழமையன்று அமர்வில் வாசிக்கப்படவுள்ளது.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்

07

## சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட தகவல்களை பகிர வேண்டாம்

**பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்**



சமூக வலைத்தளங்களினூடாக பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு 108 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 75 பேர் இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சமூக வலைத்தளங்களினூடாக பண மோசடி சம்பவங்கள் அதிகம் பதிவாகும் நிலையில் தமது தனிப்பட்ட தகவல்களை மற்றுமொரு தரப்பினருக்கு வழங்க வேண்டாம் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர்

07

## பாகிஸ்தான் கப்பல் 'திப்பு சுல்தான்' 168 பேருடன் நேற்று இலங்கை வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான PNS 'திப்பு சுல்தான்' கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

நல்லெண்ணை விஜயமாக நாட்டுக்கு வருகை தந்துள்ள இந்த கப்பலை நேற்றுக் காலை இலங்கை கடற்படையினர் கடற்படையின் மரபுகளுக்கு அமைய வரவேற்றுள்ளனர்.

07

## டெங்கு பரவும் காணிகளை சுவீகரிக்க அரசு திட்டம்

**அதிகரித்து வரும் டெங்கை கட்டுப்படுத்த அதிரடி ஏற்பாடு**



டெங்கு நோய் பரவும் வகையில் காணிகள் பாதுகாப்பற்றதாக காணப்பட்டால் அந்த காணிகள் சுவீகரிக்கப்படும் என, நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் அஜித் விதானகே தெரிவித்துள்ளார். அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில், கொத்தட்டுவ சுகாதார வைத்திய பிரிவுக்கு மாத்திரம் பொருந்தும் விசேட அவசர இலக்கமொன்று நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட நிர்வாக

07

## கொழும்பு - KKS ரயில் சேவை அடுத்த மாதம் மீள ஆரம்பம்

**ரயில்வே திணைக்களம் தெரிவிப்பு**



அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து அடுத்த மாதம் மீள ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் சேவைகள் வழமையான நேர அட்டவணையின் அடிப்படையில் மீண்டும்

07

## கிழக்கு பல்கலை சித்த மருத்துவ அலகு மருத்துவ பீடமாகியது

**அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு**



கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவபீடமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் கையொப்பமிடப்பட்டு, கடந்த 12 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த பிரகடனத்தின் படி, இதுவரை காலமும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ் இருந்த

07

## துபாயில் வேலைபெற்றுத் தருவதாக கூறி நிதி மோசடி

**SJB எம்.பி ஒருவரின் சகோதரர் கைது**



ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவரின் இளைய சகோதரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். துபாயில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து பல்வேறு நபர்களிடம் இருந்து நிதி மோசடி செய்தமை தொடர்பில்

07

## இந்திய நீர்மூழ்கிக் கப்பல் இன்று இலங்கை வருகை

**இந்திய உயஸ்தானிகராலயம் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்திய கடற்படைக்குச் சொந்தமான புதிய நீர்மூழ்கிக் கப்பலொன்று இன்றைய தினம் இலங்கைக்கு வரவுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. ஒன்பதாவது சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அந்த நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்டதாக இந்திய

07

**போலி சாரதி அனுமதிப்பத்திரம்;**

## பொரலஸ்கமுவவில் இருவர் அதிரடி கைது



பொரலஸ்கமுவ, வெரஹெர மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு முன்பாகவுள்ள சாரதி பாடசாலை ஒன்றில் போலி சாரதி அனுமதிப்பத்திர நிலையம் ஒன்று சோதனையிடப்பட்டு அதன் உரிமையாளரும் மற்றுமொருவரும் போலி சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டதாக நுகேகொட குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

07

## நயினாதீவு ஆலயத்தில் வியக்கவைத்த பாம்புகள்

**மூன்று நாகங்கள் வலம் வந்து காட்சியளிப்பு**



வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நயினாதீவு நாகபூஷணி அம்மன் வீதியில் நேற்று நாகங்கள் வலம் வந்து காட்சி கொடுத்த சம்பவம் நயினை அம்பாள் பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற நிகழ்வு இன்று (19) ஆரம்பமாகவுள்ளது.

07



கொழும்பு தமிழ் சங்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற புகழ் பூத்த கவிஞர், எழுத்தாளர், பாடலாசிரியர் கோவிலூர் செல்வராஜன் அவர்களின் பாராட்டு விழாவில் வெளியிடப்பட்ட பொன்விழா மலரின் முதல் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக் கொள்வதையும், விழாவிற்கு தலைமை வகுத்த முனைவர் சிவலிங்கம் சதீஷ்குமார் உட்பட கலந்து கொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

படம் கொழும்பு கோட்டை நிருபர்

## கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை!

**ரூ. 40ஆல் அதிகரிப்பு என்பது பொய்**



சந்தையில் கோதுமை மாவின் விலை 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் விடயம் உண்மைக்கு புறம்பானது என அத்தியாவசிய உணவு பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்த சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

07

## கொரோனா மீண்டும் தீவிரமடையும் நிலையில்

**WHO தலைவர் டெட்ரோஸ் எச்சரிக்கை**



கொரோனா தொற்று இன்னும் முழுமையாக நீங்கவில்லை என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற 76வது உலக சுகாதார சபையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர்

07

## கோழிச் சண்டை சூதாட்டம்; மட்டக்களப்பில் 07பேர் பொலிஸாரால் கைது



மட்டக்களப்பு வாழைச்சேனை, நாவலடி பிரதேசத்தில் கோழிச் சண்டை சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் 7 பேரை பொலிஸார் நேற்று முன்தினம் (17) கைது

07

# தென் மாகாண பாடசாலைகளுக்கு புதிதாக 628 ஆசிரியர்கள் நியமனம்

## நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா, சமல் ராஜபக்ஷ எம்.பி ஆகியோரும் பங்கேற்பு







**வெலிகம தினகரன் நிருபர்**

தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளும் தேசிய நிகழ்வுக்கு அமைவாக தென் மாகாண பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலி கமகே ஆகியோரின் தலைமையில் மாத்தறை சென் தோமஸ் குமார கல்லூரி பிரதான மண்டபத்தில் (16) நடைபெற்றது.

இதன்போது தென் மாகாண பாடசாலைகளுக்கு புதிதாக 628 ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். காலி மாவட்டப் பாடசாலைகளுக்கு 198 பேரும் மாத்தறை மாவட்ட பாடசாலைகளுக்கு 192 பேரும் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாடசாலைகளுக்கு 238 பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டவர்களுள் உடுகம கல்வி வலயத்துக்கு 92 பேரும் எல்பிட்டிய கல்வி வலயத்துக்கு 60 பேரும் அம்பலாங்கொட கல்வி வலயத்துக்கு 21 பேரும் மற்றும் காலி கல்வி வலயத்துக்கு 25 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்ட தெனியாய கல்வி வலயத்துக்கு 136, முலட்டியான கல்வி வலயத்துக்கு 16, அகுரஸ்ஸை கல்வி வலயத்துக்கு 31 மற்றும் மாத்தறை கல்வி வலயத்துக்கு 7 பேருமாக 192 பேர் புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும் ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் ஹம்பந்தோட்ட கல்வி வலயத்துக்கு 128 பேரும் வலஸ்முல்ல கல்வி வலயத்துக்கு 67 பேரும் மற்றும் தங்காலை கல்வி வலயத்துக்கு 43 பேருமாக 238 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வில் ஹம்பந்தோட்டை மாவட்ட இணைப்பு குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ காலி மாவட்ட இணைப்பு குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அதுகோரள, காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சான் விஜயலால் டீ சில்வா மற்றும் மாகாண வலய கோட்ட கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வை தென் மாகாண கல்வி அமைச்சு, தென் மாகாண கல்வி திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.கவின் கொழும்பு மத்திய செயற்குழு பொதுக் கூட்டம்

## ஜனாதிபதியின் ஆலோசகர் சாகலவும் பங்கேற்பு



**ருஸைக் பாரூக்**

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மத்திய தொகுதிக்கான பொதுக்கூட்டம் கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் கொழும்பு மத்திய ஐ.தே.க அமைப்பாளர் பைரூஸ் ஹாஜி தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, உதவித் தலைவர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் உட்பட

கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க மற்றும் கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் மற்றும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# மாமனாரின் மண்வெட்டி தாக்குதலில் மருமகன் பலி!

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மின்னேரிய பொலிஸ் பகுதிக்குட்பட்ட ரொட்டாவ பிரதேசத்தில் மாமனாரின் மண்வெட்டி தாக்குதலில் மருமகன் உயிரிழந்துள்ளார். மின்னேரிய ரொட்டாவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளவராவர். உயிரிழந்துள்ள நபர் கடந்த வெள்ளிக்கிழமை (16) இரவு மதுபானம் அருந்தி விட்டு தனது மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மனைவியின் தந்தை மருமகனை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மின்னேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

வரலாற்று சிறப்பபுமிகு உருகுணை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் இன்று (19) ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஸான் குணசேகர தெரிவித்தார்.

உற்சவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு (18) தெரிவித்தார்.

தொடர்ந்து அவர், இறுதிரன்தோலி பெரஹரா ஜூலை 03 ஆம் திகதி வீதி உலா வரவுள்ளது. இம் முறை பெரஹராவில் வரலாற்று சிறப்பினை எடுத்துக்காட்டக் கூடிய வகையில் கலை, கலாச்சார அம்சங்களுடன் பெரஹரா நாளாந்தம் வீதிஉலா வரும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்து 50,000 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் பாத யாத்திரையாக வரவுள்ளதாகவும் இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் விசேட புகையிரத மற்றும் பஸ் போக்குவரத்து சேவைகளும் இன்றிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பாதுகாப்புக் கருதி பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடவுள்ளதாகவும் பஸ்நாயக்க நிலமேதெரிவித்தார்.

# தினகரன் அனுசரணையில் 'வசந்த கானங்கள்'

## 'உழைப்பால் உயர்ந்தவர்கள்' வரிசையில் பிச்சை கிருஷ்ணாவுக்கு கௌரவம்



“தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் “ இன்னிசை மாலை, எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறுகிறது. அண்மையில் நம்மை விட்டு மறைந்த மூத்த ஆளுமை நம் நாட்டின் கலைப்பொக்கிஷம் காவ்யபிமானி கலைவாதி கலீல் அவர்களின் ஞாபக நினைவேந்தலுடன், பாடும் நிலா எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் ஜனன தினத்தை முன்னிட்டு மீண்டுமொரு இதமான இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் IDM Nations Campus International பிரதான அனுசரணையில் கவிக்கமல் , பாசில், ரஜினி இணைந்து வழங்கும் “அக்ஷரா” “வீனஸ்” இசைக்குழுவினர்களின் “ இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், நித்தியகலா,கோபி, கீதா,சான்,ஜெயமோகன், டாக்டர் ஜமீல், கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆளுமைகள், கவிஞர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வை இலவசமாக கண்டுகளிக்க அன்புடன் அழைக்கிறார்கள் விழா ஏற்பாட்டாளர்கள். நிகழ்ச்சி தொகுப்பு கலைஞர் பி. எம். நந்தகுமார். இந்நிகழ்ச்சியில் கலைஞர்களை ஊக்குவிக்கும் “உழைப்பால் உயர்ந்தவர்கள்” வரிசையில் இம்முறை தேசமான்ய தேசகீரத்தி, தேசசக்தி, லங்காபுத்ர குருசாமி பிச்சைக்கிருஷ்ணா கௌரவிக்கப்படவுள்ளார். இந் நிகழ்ச்சிக்கான ஊடக அனுசரணை தினகரன் பத்திரிகை, வசந்தம் எப். எம்., மொஹபத் tv , அக்ஷரா தமிழ் வழங்குகின்றன.

# மாத்தளை குரிவல ஹமீதியா, மகிந்த ராஜபக்ச வித்தியாலய எல்லைப் பிரச்சினைக்கு வரைவில் தீர்வு

## மத்திய மாகாண ஆளுநர்

**அக்குறணை குறூப் நிருபர்**



மாத்தளை மாவட்ட குரிவல ஹமீதியா மகா வித்தியாலயத்திற்கும், மகிந்த ராஜபக்ச நவோதயா பாடசாலைக்கும் இடையே, காணி தொடர்பாக மிக நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தர முயற்சிப்பதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார். அதனை நேரடியாகப் பார்வையிட்டு தீர்த்து வைக்கும் முகமாக மத்திய மாகாண ஆளுநர் நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது,..

பாடசாலைக் காணி என்பது அரசிற்கு சொந்தமான காணியாகும். இன,மத பேதங்களை மறந்து மாணவர்களது நலனுக்காகவே அதனைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். கூடிய விரைவில் ஆவணங்ளைப் பரிசீலித்து இது தொடர்பாக சரியான தீர்வைப் பெற நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனக ஹேரத். மகிந்தராஜபக்ச நவோதயா பாடசாலை அதிபர் ஜி.முத்தெட்டுதென்ன, ஹமீதியா வித்தியாலய அதிபர் எம். அஸ்லம் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்றம் இன்று

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து மகோற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று ஜுலை 04ஆம் திகதி தெப்போற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

இந்நிலையில், மகோற்சவ திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் ஆலய அறங்காவலர் சபை தலைவர் கந்தசாமி பரமலிங்கம் தெரிவிக்கையில்,

நயினாதீவில் தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளதுடன் பயணிகளின் நலன்கருதி படகு மற்றும் பேருந்து சேவைகளும் அதிகளவில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்திற்கு வரும் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தருதல் வேண்டும். ஆலய மற்றும் உள்வீதியில் தொலைபேசிப் பாவனை புகைப்படங்கள், ஒளிப்பதிவுகள் செய்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இவற்றினைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

ஆலய வளாகத்தில் பாதணிகளுடன் செல்லுதல் மற்றும் உலாவுதல் ஆகாது. அடியார்கள் ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்ப்பது நல்லது.

ஆலயத்திற்கு வருகை தரும் பெண்கள் தமிழ்ப்பண்பாட்டு கலாசார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். ஆண்கள் மேற்சட்டை அணிந்து ஆலயத்தினுள்ளும் புறமும் வருதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும், கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள் தரச் சான்றிதழை கட்டாயம் பெற்றுக்கொள்வதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்துவதுடன் தாழ்வுப்படகுகள் ஏணிப்படி வசதி அமைத்தலை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

நடமாடும் வைத்திய சேவை, சுகாதாரம், மற்றும் குடிநீர் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்க வேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் கவனம் செலுத்தப்படவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# இலாபம் ஈட்டித்தரும் அரசாங்க நிறுவனங்களை விற்கக் கூடாது

## எம்.ஏ சுமந்திரன் எம்.பி

**சாவகச்சேரி விசேட நிருபர்**



நாட்டுக்கு இலாபம் ஈட்டித்தரும் அரசாங்க நிறுவனங்களை தனியாருக்கு விற்கக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்காக பல அரசாங்க நிறுவனங்களை தனியார் மயப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதிலே இலாபம் ஈட்டும் அரசாங்க நிறுவனங்களை விற்கக்கூடாது என்பது எமது நிலைப்பாடு. அரசாங்கம் நடத்துகின்ற நிறுவனங்களில் தொடர்ச்சியாக நட்டத்தை ஏற்படுத்துகின்ற நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்யலாம்.ஆனால் நாட்டிற்கு இலாபத்தை ஈட்டித்தரும் நிறுவனங்களை தனியாருக்கு விற்கக் கூடாது.

# கைதடிச் சந்தியிலுள்ள சுப்பர் மார்க்கட் உடைத்து திருட்டு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிச் சந்திக்கு அருகாமையில் உள்ள சூப்பர் மார்க்கெட்டினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை இரவு சூப்பர் மார்க்கெட்டின் மேற்கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் மூன்று இலட்சம் ரூபாய் பணம் ,குளிர்பான வகைகள் மற்றும் பால்மா பைக்கற்களை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்படி திருட்டுக் காட்சி அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் கட்டுக்கலை வை. எம். எம். ஏ. இன் ஏற்பாட்டில் கண்டி கட்டுக்கலைப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கணனி தொழில் நுட்ப கல்வி அறிவை விருத்தி செய்யும் வகையில் டி. பி. கோடினிங் ஸ்கூல் என்ற கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கனணி தொழில் நுட்ப நிலையம் திறப்பு நிகழ்வும் மற்றும் கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் விஸ்தரிப்புக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வும் இலங்கை ஒலிரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவருமான அப்சல் மரைக்கார் தலைமையில் கட்டுக்கலை அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

# மத்திய மாகாணத்தில் 1025 டிப்ளோமா தாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

**தம்புள்ள தினகரன் நிருபர்**

தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிககளை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் 1025 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் தேசிய நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தலைமையில் வெள்ளிக்கிழமை பொல்கொல்ல மஹிந்த ராஜபக்ஸ கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாத்தளை மற்றும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கு பற்றுதலுடன் இடம் பெற்ற இந் நிகழ்வில் சிங்கள மொழி மூல ஆசிரியர்களாக 480 பேருக்கும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களாக 446 பேருக்கும் ஆங்கில மொழி ஆசிரியர்களாக 99 பேருக்குமாக மொத்தம் 1025 டிப்ளோமா தாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப் பட்டன.

# ஐந்தாவது இளைஞர் பாராளுமன்ற 3ஆவது அமர்வு ஜனாதிபதி செயலகத்தில்

ஐந்தாவது இளைஞர் பாராளுமன்றத்தின் 3 ஆவது அமர்வு இரு தினங்களாக (17,18) ஜனாதிபதி செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 131 பேர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். அதன் பிரதமர் பெத்தும் ரண



சிங்க ஐந்தாவது பாராளுமன்றத்தின் அமர்வுகளை ஆரம்பிக்கும் முகமாக வரவேற்புரை நிகழ்த்தினார்.

இரு தினங்கள் நடைபெற்ற அமர்வுகளின் போது உத்தேச இளைஞர் பாராளுமன்ற சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ஊடக பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க,

1960 களில் உலகம் முழுவதும் இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மை நிலை காணப்பட்டது. அதன் பலன்கள் எமது நாட்டிற்கும் கிடைத்தன. 1967 களில்

07

# ஜனாதிபதியின் தூரநோக்கு அமெரிக்கா, இங்கிலாந்தைவிடவும் விசாலமானது

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி.

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாரிய வீழ்ச்சிக்குள்ளாகியிருந்த நாட்டை முழு உலகத்திற்கும் முன்னுதாரணமான வகையில் குறுகிய காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தூரநோக்கு இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளை விட விசாலமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்த நாட்டையும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்களையும் மீண்டும் கட்டியெழுப்பி உலகத்தின் முன்னிலையில் மீண்டும் வெற்றிகரமாக பயணிப்பதற்கு வழி செய்ய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை அவர் துணிவுடன் பாரமெடுத்தார். சரியான வழிகாட்டலுடன் முழு உலகுக்கும் முன்மாதிரியாக நாட்டை கட்டியெழுப்பி எமது நாடும் உலகத்தோடு

07

# நாட்டை முன்னேற்றுவதைத் தவிர்ந்த எதுவும் பொ. பெரமுனவுக்கு கிடையாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தாய்நாட்டை முன்னேற்றுவது தவிர்ந்த வேறு எந்தவொரு நிகழ்ச்சி நிரலும் பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பொதுஜன பெரமுன கட்சியானது எந்தக் காலத்திலும் நாட்டுக்கு எதிராகவோ அல்லது நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தும் பயணத்தைத் தேர்ந்தெடுக்காது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொண்டு வரும் விஷமப் பிரசாரங்களை கேட்டு ஏமாறாது நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வருமாறு மக்களை கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை ரெஜி ரணதுங்க நினைவு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், எதிர்க்கட்சியானது வினோதத்திற்காகவே தேர்தலை கோரிநிற்கின்றது. தேர்தலைப் பெற்றுக்கொடுக்காவிட்டால் கொழும்பை சுற்றிவளைப் போமென கூறி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டாலும் சிறு தரப்பினர் மட்டுமே அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதை காண முடிந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிதி மோசடி செய்த இந்திய பிரஜை வெளிநாடு செல்ல முற்படுகையில் கைது!

ரூ. 3 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் மோசடி செய்த இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்ல முற்பட்டவேளையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கொம்பனிதெருவில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீட்டு வசதி செய்து தருவதாக வாக்குறுதி அளித்து, இந்த இந்திய பிரஜை 3 இலட்சத்து 678 அமெரிக்க டொலர்களை மோசடி செய்துள்ளார்.

இந்தநிலையில், 65 வயதுடைய குறித்த

07

## இந்த வருடத்தின் டிசம்பர் மாதத்திற்குள்

# மேலும் 800 பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கம்



2023 ஆண்டு டிசம்பருக்குள் மேலும் 800 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை கவனத்தில் கொண்டு இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவதற்கு வழங்கிய இலக்குக்கு இணங்க கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படுகின்றன.

இந்த கட்டுப்பாடுகளை நாங்கள் காலவரையின்றி வைத்திருக்க முடியாது என்று அந்த அதிகாரி கூறியதாக சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

07


## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் வங்கி ஹம்பாந்தோட்டை பிராந்தியத்துக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டதும் 18.07.2023 வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் வளாகங்களில் பொது ஏலத்தில் விற்கப்படும். இந்த ஏல விற்பனை ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

| | |
|---|---|
| **ஏல விற்பனை நிகழும் தேதிகள்** | 19.07.2023 மற்றும் 20.07.2023 |
| **ஏல விற்பனை நிகழும் இடங்கள்** | தங்காலை கிளை அரங்கம் |
| **அடகு வைக்கப்பட்ட கிளைகள்** | அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, தங்காலை அம்பலாந்தோட்டை, வலஸ்முல்ல, பெலியத்த, சூரியவெவ, மித்தெனிய, ரன்ன |
| **அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள்** | வீரவில, நிர்வாக வளாகம் (Administrative Complex), சயுருபாய, லுனுகம்வெஹெர, தங்காலை, விதரந்தெனிய, ஹுங்கம, கட்டுவன |

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அம்பாந்தோட்டை**
**தொலைபேசி இல. 047-2220901/ 047-2220902/ 047-2220903**

1961 PEOPLE'S BANK
Pride of the Nation



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 யூன் 21ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 110,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123I226 | LKA18223L227 | LKA36424F213 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 50,000 | 30,000 | 30,000 | 110,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 யூன் 21 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 யூன் 23 |
| வழங்கப்படும் திகதி | : 2023 யூன் 23 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 யூன் 21, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



## பகிரங்க அறிவித்தல்

**நெம்கோலொக் (பீவீடி) எல்டிட (PV123561) மற்றும் நெம்கோ டிரேடிங் சென்டர் (பீவீடி) எல்டிட (PV118443) என்பவற்றை - ஒருங்கிணைப்பதற்கான அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 24 2(1)ஆம் பிரிவின் விதிகளுக்கமைய அமுலுக்கு வருமாறு நெம்கோலொக் (பீவீடி) எல்டிட மற்றும் நெம்கோ டிரேடிங் சென்டர் (பீவீடி) எல்டிட இன் பணிப்பாளர் சபையானது இரண்டு கம்பனிகளையும் ஒருங்கிணைப்பதாக தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் - நெம்கோலொக் (பீவீடி) எல்டிட மற்றும் நெம்கோ டிரேடிங் சென்டர் (பீவீடி) எல்டிட ஓர் தனிக் கம்பனியாக நெம்கோ லொக் (பீவீடி) எல்டிட எனும் பெயரில் தொடர்ந்து இருக்கும்.

இந்த ஒருங்கிணைப்பு, கம்பனிகளின் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்.

**நெம்கோலொக் (பீவீடி) எல்டிட இன் பணிப்பாளர் சபை**



**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39யு(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இல: DSWA/LND/4/ACQUI/F1/17-B

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல: 03/J/73/L/696/BE

கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி உரிமம் நீக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதிய 2311/35ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமனியில் (iii) பகுதியில் 2A பக்கத்தை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - தெற்கு |
| மாவட்டம் | - ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - வலஸ்முல்லை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - பாதெகம |
| கிராமம் | - பாதெகம |
| ஆரம்ப வரைபட இல | - 220 |
| துண்டு இல | - 279 |

**ஐ.ஆர்.கே விதாரண**
**பிரதேச செயலாளர்**
**வலஸ்முல்லை**

**2023.06.09ஆம் திகதி**
**வலஸ்முல்லை பிரதேச செயலகம்.**


## தேசிய லொத்தர் சபை — National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

### சனிக்கிழமை 2023.06.17

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5148 | ரூ. 15,947,870.00 | O | 3 0 9 8 7 3 |
| ராசி சுப பலன் (Handahana) | 457 | ரூ. 2,697,161.20 | கடகம் (விசேட இலக்கினம்: கடகம்) | 25 34 37 52 |
| Mega Power | 1496 | ரூ. 330,502,026.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | Q (சுப்பர் இலக்கம் 18) | 15 44 50 55 |
| ஜாதிக சம்பத | 1603 | ரூ.12,597,187.52 | சிம்மம் | 0 4 1 6 5 9 |
| தன நிதானய | 1178 | ரூ. 95,280,077.60 | H | 07 39 50 68 |
| கொவிசெத | 3390 | ரூ. 63,882,794.40 | H | 01 06 20 65 |

### வெள்ளிக்கிழமை 2023.06.16

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5147 | ரூ. 14,891,680.00 | C | 7 7 5 1 4 5 |
| ராசி சுப பலன் (Handahana) | 456 | ரூ. 2,670,216.60 | கடகம் (விசேட இலக்கினம்: கடகம்) | 08 15 18 59 |
| Mega Power | 1495 | ரூ. 330,196,810.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | O (சுப்பர் இலக்கம் 02) | 17 30 31 32 |
| ஜாதிக சம்பத | 1602 | ரூ.12,534,249.52 | மேஷம் | 9 8 9 4 4 1 |
| தன நிதானய | 1177 | ரூ. 95,107,543.20 | O | 07 21 22 59 |
| கொவிசெத | 3389 | ரூ. 63,437,637.60 | P | 06 28 43 74 |

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 210.84 | 224.97 |
| கனடியன் டொலர் | 231.73 | 247.95 |
| யூரோ | 335.94 | 356.92 |
| ஜப்பான் யென் | 2.2049 | 2.3396 |
| சிங்கப்பூர் டொலர் | 230.72 | 245.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 392.72 | 417.00 |
| சுவிஸ் பிராங்க் | 342.03 | 366.44 |
| அமெரிக்க டொலர் | 311.60 | 328.92 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 796.87 | கட்டார் ரியால் | 84.61 |
| குவைத் டினார் | 1004.17 | சவூதி ரியால் | 82.25 |
| ஓமான் ரியால் | 801.28 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.99 |

# தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**நிதியளிப்பு: ஆரம்ப சுகாதார சேவைகளை கட்டியெழுப்பும் செயற்றிட்டம் (PSSP)**

| தொ. இல. | உபகரணம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை முறி ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|
| **மருத்துவ உபகரணங்கள்** | | | | |
| 1 | Sterilizers | 29 | 4,000.00 | 48,000.00 |
| 2 | Wax Bath | 1 | 1,000.00 | 1,500.00 |
| 3 | CTG Machine | 8 | 5,000.00 | 61,000.00 |
| 4 | Slit Lamp | 1 | 2,000.00 | 20,000.00 |
| 5 | Laparoscopy | 1 | 10,000.00 | 350,000.00 |

**கேள்வி நிபந்தனைகள்**

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) ஊடாக இந்த விலைக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
02. விண்ணப்பதாரர் இலங்கை வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடத அதிகார சபையில் (மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்காக) பதிவைப் பெற்ற நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இயந்திரங்களுக்காக உள்நாட்டு சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஊடாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்வி ஆவணங்களை எமது அலுவலகத்தின் கணக்கியல் பிரிவில் 2023-06-20ஆம் திகதி முதல் 2023-07-07ஆம் திகதி வரையில் பெற்றுக்கொள்ளலாம். இங்கு ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் அதன் மதிப்பீட்டுத் தொகையின் 1% கட்டணத்தை மீளளிக்கப்படும் வைப்பு தொகை மற்றும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வகையில் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் இலக்கத்துடன் உபகரணத்தின் பெயர் மற்றும் 2023ஆம் வருடத்திற்கு எனக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 2023-07-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தவிசாளர், பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி எனும் முகவரிக்கு தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
06. அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
07. நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் மற்றும் உரிய வகையில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
09. இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

091-2231620 / 091-2224609

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி,**
**காலி.**

---

சுற்றாடல் அமைச்சு

# விலைமனு கோரல்

## சுற்றாடல் அமைச்சுக்கு சுத்தப்படுத்துகை சேவைகளை வழங்குதல் 2023/2024

1. பத்தரமுல்ல ரொபர்ட் குணவர்தன மாவத்தை, இலக்கம் 416/சீ/1, “சொபாதம் பியச” எனும் முவரியில் அமைந்துள்ள சுற்றாடல் அமைச்சின், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2023/2024 ஆண்டு காலப் பகுதிக்கு சுற்றாடல் அமைச்சுக்கு மேற்குறித்த சேவையை வழங்கும் பொருட்டு, 2023 ஜுலை 15 ஆம் திகதியிலிருந்து 2024 ஜுலை 14 ஆம் திகதி வரை, தகைமை பெற்ற விலைமனுதாரிகளிடமிருந்து தேசிய போட்டித் தன்மையுள்ள விலைமனு கோரல் செயற்பாட்டின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இவ் விடயம் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற விலை மனுதாரிகள், மீள் செலுத்தப்படாத ரூபா 2500.00 ஆன மற்றும் மீள் செலுத்தப்படுகின்ற ரூபா 5000.00 ஆன பணத் தொகையை சுற்றாடல் அமைச்சின் சிறாப்பர் பிரிவிற்கு வெவ்வேறாகச் செலுத்தி பெற்றுக் கொள்கின்ற விலை மனு விண்ணப்பப் படிவங்களின் வாயிலாக விலைமனுக்களை முன் வைக்கலாம். 2023.06.19 ஆம் திகதியிலிருந்து 2023.07.04ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி இலிருந்து பி.ப. 3.00 மணி வரை, சுற்றாடல் அமைச்சின் முதலாவது மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவிலிருந்து விலைமனு விண்ணப்பப் படிவத் தொகுப்புகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.
3. விலை மனுக்களை முன் வைக்கையில் நிறுவனத்தின் சேவை அனுபவம் மற்றும் பணியாற்றக் கூடிய திறன் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்துதல் வேண்டும். (குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து முன் வைக்க வேண்டும்.)
4. பூர்த்தி செய்யப்பட்ட விலை மனு ஆவணங்கள் இரண்டு பிரதிகளுடன் (02) கூடியதாக, மூலப் பிரதி மற்றும் உப பிரதி எனக் குறிப்பிடப்பட்ட இரண்டு கடித உறைகளில் இட்டு, அவ்விரு கடித உறைகளையும் தனியொரு கடித உறையில் இட்டு முத்திரை பதிக்க வேண்டியிருப்பதுடன், அக் கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் “சுற்றாடல் அமைச்சுக்கு சுத்தப்படுத்துகை சேவைகளை வழங்குதல் - 2023/ 2024” எனக் குறித்து 2023.07.05 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறின்றேல் சொபாதம் பியச அலுவலகத் தொகுதியின் முதலாவது மாடியில் அமைந்துள்ள நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலை மனு பெட்டியில் விலை மனுக்களை இடுவதன் மூலம் குறித்த விலை மனுக்களை முன் வைக்கலாம். தாமதமாகக் கிடைக்கின்ற விலை மனுக்களும், இலத்திரனியல் முறையில் முன் வைக்கப்படுகின்ற விலை மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அத்தகைய அடிப்படையில் முன் வைக்கப்படுகின்ற விலை மனுக்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். விலை மனுக்களை ஏற்கும் செயற்பாடு நிறைவடைந்தவுடனேயே விலை மனுக்கள் திறக்கப்படுவதுடன், விலை மனுக்களை முன் வைத்துள்ள விலை மனுதாரிகளின் பிரதிநிதிகள் தொடர்புடைய நிறுவனத்தின் கடிதத்துடன் கூடியதாக அதில் பங்கேற்கலாம்.
5. மேலதிக விபரங்களைத் தொ.பே இலக்கம் 011-2034111 எனும் இலக்கத்தைத் தொடர்பு கொண்டு நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
6. இவ் விலை மனுக்களை முற்று முழுதாக அல்லது பகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு சுற்றாடல் அமைச்சின் திணைக்களப் பெறுகை குழுவுக்கு உரிமம் காணப்படுவதுடன், இது தொடர்பாக சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக கருதப்படும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**சுற்றாடல் அமைச்சு,**
**“சொபாதம் பியச”,**
**இலக்கம் 416/சீ/1,**
**ரொபர்ட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

# PMF பினான்ஸ் பீஎல்சி

pmf finance

**மீட்கப்படாத தங்க பொருட்களை பகிரங்க ஏல விற்பனையில் விற்றல்**

PMF பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தின் தங்கக் கடன் திட்டத்தின் கீழ் பிணை ஒன்றாக கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளுக்கு 2022.10.31 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்ட காலக்கெடு முடிந்தும் இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள் கீழுள்ள திகதியில் மு.ப. 09.30 தொடக்கம் பி.ப. 12.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| கிளை மற்றும் நிலையம் | ஏலம் இடம்பெறும் திகதி மற்றும் இடம் |
|---|---|
| திருகோணமலை, எல்பிட்டி, வெள்ளவத்தை, கண்டி, மாத்தறை, அநுராதபுரம், மத்துகம, கம்பஹா, மாத்தளை, நீர்கொழும்பு, ஹோமாகம மற்றும் குருநாகல் | 2023 ஜுன் 28 இல. 47, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 |

- முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனைக்கு முன்வைக்கப்படும் பொருட்களின் பகுதி ஒன்றை அல்லது அனைத்தையும் அகற்றிக்கொள்ளல் மற்றும் இந்த ஏல விற்பனையை ரத்துச் செய்தல் அல்லது ஒத்திவைத்தல் தொடர்பிலான உரிமை PMF பினான்ஸ் பீஎல்சி நிறுவனம் வசமானது.
- ஏல விற்பனைக்காக வருகைதரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை எடுத்து வருதல் வேண்டும்.
- ஏல விற்பனைக்கு பிரவேசிக்கும்போது கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

**முகாமையாளர் - தங்கக் கடன்**
**PMF பினான்ஸ் பீஎல்சி**
**இலக்கம் 47, தர்மபால மாவத்தை, கொழும்பு 03**
**தொலைபேசி: 011-7 733 600/ 0719 342 413**

---

# காணி எடுத்தல் சட்டம் (அத் 460)
## 39(I) பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

குறிப்பு இல: KOT/LND/ACQVI/01/68

கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியின் B.C.D.E.F.H.J.K.M.K மற்றும் N என துண்டுகள் சட்டத்தின் பிரிவு 39(1)இன் கீழ் இரத்துச்செய்யப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2023.03.13 ஆம் திகதி இல.2323/04 பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : கொட்டபொல |
| சிறு பிரிவு | : மொரவக்கொரலே |
| கிராமம் | : மத்துகொபே |
| திட்டம் இல | : அ.க.பி.169 |
| துண்டு இல | : 10 B.C.D.E.F.H.J.K.M.K மற்றும் N |

**காணி எடுத்தல் உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்**
**கொட்டபொல**
**2023.06.13**

---

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

110
மாருதி கார்கள் விற்பனைக்கு

CPKS-0778 Maruti 800, 2011, car கூடிய விலைக்கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 036947

112
மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

WPKA-3588 Mazda, 2002, car கூடிய விலைக்கேள்விக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சீ, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0714542958. 036945

119
பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

SG-LE- 4796 - TATA - LPT 713 - MOTOR LORRY - TIPPING - 2007 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டெட், 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே 0812 081033 037446

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WPQV-8108 Bajaj, 2009, CPQS-2963 Bajaj, 2009, Three-wheel கூடிய விலைக்கேள்விக்கு வெலிபல் பினான் ஸ் பிஎல்சீ, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 036948

---

எரிபொருள் வழங்கல் குழாய்வரிசைக்கான

# குழாய்கள் மற்றும் இணைப்புக்களை வழங்கல்

**BID REF: B/17/2023**

## பிற்சேர்க்கை - 01

மேலேயுள்ள விலைமனு தொடர்பாக 2023.05.17 ஆம் திகதியன்று இபெகூ **www.ceypetco.gov.lk** என்ற இணையதளத்திலும் தேசிய புதினப்பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டு விலைமனுக்கோரல் ஆவணத்தை ஏற்கனவே கையேற்றுக் கொண்ட வளமுள்ள விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

மேலேயுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்திற்கு பின்வரும் திருத்தங்கள் உட்சேர்க்கப்பட்டுள்ளதென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

**திருத்தம் இல. 1:**
**பிரிவு 03 - தொழில்நுட்ப விபரக்குறிப்பு**

3,4,5,6, 7 மற்றும் 24 ஆகிய அம்ச இலக்கங்களின் பொருட்கள் ASTM A234 WP 11 இற்கு பதிலீடாக **ASTM A234 WP11** என திருத்தப்படல் வேண்டும்.

இதற்கமைவாக,

**4. விலைகளின் அட்டவணை - அட்டவணை “A” மற்றும் அட்டவணை “B”**

3,4,5,6, 7 மற்றும் 24 ஆகிய அம்ச இலக்கங்களின் பொருட்கள் ASTM A234 WP 11 இற்கு பதிலீடாக **ASTM A234 WP11** என திருத்தப்படல் வேண்டும்.

---

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -1XXX | NISSAN | B14 | 1996 |
| KI -5XXX | NISSAN | TIIDA SC11 | 2007 |
| **வேன்** | | | |
| JY -2XXX | HYUNDAI | GRACE H 100M | 2000 |
| **லொறி** | | | |
| 041 -2XXX | ISUZU | TLD54 | 1982 |
| LA -4XXX | MITSUBISHI | GD-U61T | 2001 |
| LB -7XXX | TATA | ACE | 2006 |
| PP -1XXX | TATA | ACE | 2010 |
| PS -6XXX | TATA | ACE | 2011 |
| LM -7XXX | TATA | LPT1615 EX2 | 2016 |
| **டிப்பர்** | | | |
| JS- 7XXX | LANKA ASHOK LEYLAND | COMET TIPPER | 2005 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GG -3XXX | BAJAJ | BAJAJ AUTO | 2001 |
| HG -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HM -2XXX | BAJAJ | AUTO RS 2 STROKE | 2003 |
| QB -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QJ -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QT -7XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| YC -9XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| QX -3XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YL -6XXX | PIAGGIO | APE | 2011 |
| YR -0XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAB -6XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAH -0XXX | BAJAJ | RE 205 | 2013 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BIU -1XXX | HONDA | DIO | 2020 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஜுன் 19ஆம், 20ஆம், 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஜுன் 22ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

www.skillsads.com

---

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# ஏலத்திற்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | மொட்டுன்னவத்தை மீள்குடியேற்ற பகுதியின் வடிகால் மற்றும் உள்ளக வீதிகள் அமைத்தல் - கொட்டல, வேயன்கொடை |

தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் மேற்கண்ட நோக்கத்திற்காக ஏலங்கள் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 2023 ஜுன் 19 முதல் 2023 ஜுலை 10 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் www.rda.gov.lk எனும் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

---

கமத்தொழில் இராஜாங்க அமைச்சு

# தேசிய உணவு மேம்பாட்டு சபை

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)
**தெஹிவளை விற்பனை நிலையத்தின் மேல்மாடியினை குத்தகைக்கு வழங்கல்**

தேசிய உணவு மேம்பாட்டு சபையின் (இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையத்தின்) இல. 21B 1/1, காலி வீதி, தெஹிவளை எனும் முகவரியில் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான விற்பனை நிலையத்தின் மேல்மாடியினை (728 சதுர அடி) 2 வருட குத்தகைக் காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த மனுக்கோரல் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பங்களை **2023-06-19 ஆம் திகதி பி.ப.2.30** மணிவரை கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள தேசிய உணவு மேம்பாட்டு சபையின் தலைமை அலுவலகத்தில் மீள்ச்செலுத்தப்படாத **ரூ.1,000.00** கட்டணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

**2023.07.06 ஆம் திகதி பி.ப.2.30** மணிக்கு மனு ஆவணம் ஏற்றுக்கொள்ளல் நேரம் நிறைவுபெறுவதுடன், மனுத்திறப்பு தலைமை அலுவலக பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெறும். மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் பங்கேற்கலாம். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் **“தெஹிவளை விற்பனை நிலையத்தின் மேல்மாடி குத்தகைக்கு வழங்கல்”** எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அல்லது பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

குறித்த கட்டிடத்தினை வாரத்தில் அலுவலக நாட்களில் **மு.ப.10.00** மணி முதல் **பி.ப.4.00** வரை பரிசீலனை செய்யமுடியும். மனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை கொள்முதல் குழு கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் **011-2580194, 011-2506895, 011-3370028** எனும் இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

தலைவர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# ஆனித் திருமஞ்சனம்



இறைவனை நீராட்டுதற்கே திருமஞ்சனம் என்று பெயர். அலங்காரப் பிரியரான பெருமாள் புனித நீராடலேற்றலையும் திருமஞ்சனமெனக் கூறுவதுண்டு. அனைத்து வைணவத் தலங்களிலும் இது மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அபிஷேகப் பிரியரான சிவனுக்கும் மிகவும் ஏற்புடைய நாள்.

பொதுவாக தட்சிணாயணம் (ஆடி மார்கழி), உத்தராயணம் (தைஆனி) என இரண்டு அயண காலங்களுக்கும் தெய்வமூர்த்திகளின் சிலா ரூபங்களுக்கும் நெருங்கிய ஆன்மீக தெய்வீகத் தொடர்பம்சங்கள் பல உண்டு என்று கூறலாம். சூரிய, சந்திர கோள்கள் ஓட்டங்களுக்கேற்ப கோயில்களின் விமானங்கள் மூலம் கருவறைக்குள் தெய்வீகக் கதிர்களின் வீச்சுகள் அமையும்.

அதேபோல் பூமிக்கடியில் உள்ள நீரோட்டங்களும், ஒளி நீரோட்டங்களும் அந்தந்த அயண கதிகளுக்கேற்ப அவை மாறுபடும். அபிஷேக நீர், கோமுக (அபிஷேக நீர் வரும் வழி) நீர், பல்வேறு வகையான அபிஷேகப் பொருட்களும் சுயம்புத் திருமேனியிலோ, உற்சவ விக்ரஹங்களிலோ பட்டு பூமியை அடையும் போது பூமியின் கீழுள்ள நீரோட்டங்களும், அலை, கதிர், ஒளி, ஒலியோட்டங்களும் அவற்றைப் பெற்றுப் பிரதட்சிணம் வருகையில் நம் பாதங்கள் மூலமாக நம் தேகத்தில் சேர்க்கின்றன.

ஆனி மாதம் உத்தராயணக் கடைக் காலமும் தட்சிணாயணத்தின் முதற் காலமும் சேரும் உத்தம மாதம். இரு அயண கதிகளின் கூட்டுக்கதிர்களைச் சுமந்து வருவதே ஆனி மாதம். உண்மையில் சூர்யப் பாதையில் மாற்றம் ஓரளவு ஆனியிலேயே ஏற்பட்டு விடுவதால் ஆனி மாதத்தில் இறை நீராட்டினால் ஏற்படும் தெய்வீக விளைவுகள் அற்புதசக்தி வாய்ந்தவையாகும்.

## சைவ மஞ்சரி

## மானுடவியல்

### சாக்கிய நாயனார்



120

தரிசிப்பித்தவாறும் அறியத்தகும். அது கந்தபுராணத்தில், "இருவருமச் சிவனுருவை இயன்முறையால் தாபித்து விரைமலர் மஞ்சனஞ் சாந்தம் விளக்கழல் ஆதிய அமைத்துப் பொருவரு பூசனை புரிந்து போற்றி செய்து வணங்குதலும் எரிகெழு சோதிக்கணித்தாய் எந்தைய வண் வந்தனனே" "மைக்களமும் மான்மழுவும் வரத முடனபயமுறும் மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ் செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய் முக்கணிறை யாங்காண முன்னின்றேயருள் புரிந்தான்" எனவும் தேவாரத்தில், "செங்கண் மாலும் பிரமனுந் தம்முளே எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார் இங்குற்றேனென் றிலிங்கத்தே தோன்றினான் பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே" எனவும் வருவனவற்றாற் காண்க.



சிவமே மெய்ப்பொருளெனெ அருளால் உணர்ந்து சிவ உபாசனையிலேயே லயித்திருந்த சாக்கிய நாயனார்க்குச் சிவம் தன் அருட்குறியாகிய இலிங்கத்திருமேனியை அவரகத்திற் பதித்தமையால் அதன்சார்பில் மேற்கண்டவாறான சிவலிங்க உண்மை மகிமைகளைத் தம்மிற் றாமே உணரலானார். உணருந்தோறும் தம்மகமெல்லாம் பூரித்தினிமை செய்யும் அதனைத் தம் புறக்கண்ணாற் கண்டும் மகிழ வேண்டும் ஆர்வம் மேலிடவே தினமும் உண்பதன்முன் சிவலிங்க தரிசனஞ் செய்யும் நியமந் தலைக்கொள்ளலானார். அது, அவர் புராணத்தில், "காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாஞ் சிவலிங்கம் நாணாது நெடியமால் நான்முகனுங் காணநடுச் சேணாருந் தழற்பிழம்பாய் நின்ற நிலை தெளிந்தாராய்" "நாடோறுஞ் சிவலிங்கங்கண்டுண்ணு மதுநயந்து மாடோர் வெள்ளிடை மன்னுஞ் சிவலிங்கங் கண்டுமனம் நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார் பாடோர்கற் கண்டதனைப் பதைப்போடு மெடுத்தெறிந்தார்" எனவரும்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர் பவனி

வரலாற்று புகழ் மிக்க களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபை பூரண ஏற்பாட்டில், பிரதேச வாழ் பக்த பெருமக்களின் ஆதரவுடன் முன்னெடுத்து வரும் வருடாந்த அலங்கார உற்சவ தேர் பவனி பெருவிழா நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி மாதம் 17ஆம் நாள் (2023/07/02) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஆலய பிரதம சிவாச்சாரியார் வணக்கத்துக்குரிய சிவாகமரத்னம், சிவஞானசுடர், கிரியாக்ரம ஜோதி, ஈசான்ய சிவாச்சாரியார் கலைமாமணி, கலாநிதி, சிவஸ்ரீ. சிவம். ஸ்ரீ சுதர்ஷன சர்மா குருக்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

எதிர் வரும் ஜூன் மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறும் இத் திருவிழா வைபவத்தின் உற்சவகால கிரியா நிகழ்வுகள் வருமாறு: 2023/06/29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை, கணபதி ஹோமம், முகூர்த்த உற்சவ பத்திரிகை பாடனம், முகூர்த்தக்கால் நடுதல் நவக்கிரக ஹோமம், அலங்கார பூஜையுடன், மாலை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி மற்றும் சண்டேஸவரர் பூஜையும் நடைபெறும்.

2023/06/30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.26 மணிவரையிலான சுப வேளையில் எம்பெருமான் ஸ்ரீ கதகதிர் வேலாயுத சுவாமிக்கு திருக்கொடியேற்றம், சண்டேஸ்வரர் பூஜையுடன், மாலை விசேட வசந்த மண்டப பூஜையும் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் நாட்டியாஞ்சலி மற்றும் கீதாஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெறும்.

2023/07/01ஆம் திகதி சனிக்கிழமை காலை பால்குட பவனி, பால்குட அபிஷேகம், ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி நவோத்தர (1009) தல சக சங்காபிஷேகம் மற்றும் அன்னதானமும் மாலை, மாம்பழத் திருவிழாவும் சிறப்பு சமய சொற்பொழிவுகளும் நடைபெறும்.

2023/07/02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வசந்த மண்டப பூஜை, இரத பூஜை, இரத கலசப் பூஜை வருடாந்த அலங்கார உற்சவ தேர்பவனியும் நடைபெறும்.

2024/07/03ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் கொடியிறக்கம் மற்றும் அன்னதானமும் மாலையும் திருக்கல்யாணத்துடன் அன்னதானமும் நடைபெறும்.

2023/7/04ஆம் திகதி செவ்வாய் கிழமை மாலை திரு மடை பூஜை இடம்பெற்று வைரவர் காப்பு அணிவிப்பு வைரவ பெருமாளின் திருவடைமாலை ஏலம் இடம்பெறும்.

மேற்படி உற்சவகால குருமணி சிவாச்சாரியார்களாக வணக்கத்துகுரிய கலாலய வாரிதி, கிரியா மணி சிவஸ்ரீ க. விஜேகுமாரக் குருக்கள் (ஸ்தானிகர்) கிரியாரத்னம் சிவஸ்ரீ கு. குகதாஸக் குருக்கள், கிரியாஜோதி சிவஸ்ரீ ச. சுந்தர குருக்களும் சர்வ சாதகர்களாக சாதக வாரிதி பிரம்மஸ்ரீ சு.சுமனலத சர்மா, சாதக ரத்னா பிரம்மஸ்ரீ இரா. சுதன் சர்மாவும் சம்ரக்ஷ சிரோன்மணிகளாக கிகிரியா இளம் சுடர் பிரம்மஸ்ரீ ம.சுபராஜித சர்மா மற்றும் சாதக இளம்சுடர் பிரம்மஸ்ரீ நா.சுலக்ஷன சர்மா குருக்களும் கலந்துக் கொள்வார்கள்.

மேலும் இதன் போது பண்டாரவளை, தேசிக ஸ்ரீ ரங்கநாதனின் சாத்துப்படி அலங்காரத்துடன், கம்பளை, புஸ்சலாவ சுடர்ஞானசுரபி, இசைஞானி தங்கவேல் சண்முகராஜாவின் மங்கள வாத்தியமும் இரக்குவானை கலாகீர்த்தி இசை அமுதன் கங்கா பேண்ட் வாத்தியமும் இடம்பெறும்.

(நா. ஜெயரட்ணம்)



கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஆலயத்தின் புதிய தோற்றத்தை படத்தில் காணலாம். (படம் வடகொழும்பு தினகரன் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19684) மாலையில் தீபமேற்றி வழிபட்ட பின், கோவிலுக்குச் சென்று தீபமேற்றி வழிபடலாமா?**

சந்தேகமே வேண்டாம். தாராளமாக வீட்டில் தீபமேற்றிய பின் கோவிலிலும் தீபமேற்றி வழிபடுங்கள். அதனால், உங்களுக்குப் புண்ணியம் பன்மடங்கு சேரும்.

**19685) பவுர்ணமி பூஜையை பகலில் செய்யலாமா?**

பவுர்ணமியன்று வீட்டில் செய்யும் பூஜையை பகல் அல்லது மாலையிலும், கோவில்களில் இரவிலும் செய்வது சிறந்தது. பவுர்ணமி நிலவு உதயமான பிறகு கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வெளிபிரகாரத்தை வலம்வருவது ஆரோக்கியத்துக்கு நல்லது. மனதைரியமும் வளரும்.

**19686) கிரகப்பிரவேசத்தின் போது முதலில் பசு மாட்டை வீட்டிற்கு அழைத்து வருவது ஏன்?**

பசு லட்சுமியின் அம்சம். தர்ம தேவதையின் அடையாளம். பால் தருவதால் "கோமாதா" என்று தாயாகப் போற்றுவர். வீட்டில் லட்சுமி கடாட்சம் நிலைக்கவும், தர்மம் தழைக்கவும் பசுவை வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறார்கள்.

**19687) வீட்டில் கணபதி ஹோமத்தை நடத்துவதாக இருந்தால் எப்போது செய்வது நல்லது?**

பிரம்ம முகூர்த்தம் என்னும் அதிகாலை 4.30 முதல் 6 மணிக்குள் நடத்துவது நல்லது. விநாயகருக்குரிய சதுர்த்தி திதி, அஸ்தம் நட்சத்திர நாளில் நடத்துவது இன்னும் சிறப்பு.

**19688) நிஷ்டை என்பதன் பொருள் என்ன?** புலன்களின் இயக்கத்தை ஒடுக்கி தியானத்தில் அமர்வதே நிஷ்டை

**19689) உற்சவர் புறப்பாட்டின் போது மூலவரை வணங்குவது சரிதானா?**

மூலவரின் எழுந்தருளித் திருமேனி (விழாக்காலத்தில் பவனி வருபவர்) தான் உற்சவர். உற்சவமூர்த்தி புறப்பாடு என்பது மூலவருக்கு செய்யும் விழா. அந்நேரத்தில் நாமும் திருவீதியுலாவில் கலந்து கொண்டு தரிசிப்பது சிறப்பு. சில கோவில்களில் உற்சவர் புறப்பாடானதும், மூலவர் சந்நிதியை நடை சாத்தும் வழக்கமும் உண்டு.





முந்தல் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் வியாழக்கிழமை (15)வெளிக்கொடி ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. மகா பாரதக் கதையை அடிப்படையாக வைத்து இந்தத் திருவிழா இடம்பெறுகின்றது. அடியார்கள் கொடிக்கம்பத்துக்கு மஞ்சள் தேய்த்து தமது பக்தியை வெளிப்படுத்தினர். இதன் போது பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடப்பு குறூப் நிருபர்

## புத்தளம் உடப்பு பாரிப்பாடு முருகன் ஆலய வருசாபிஷேகம்





# மட்டக்களப்பு- களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம்

கிழக்கிலங்கையின் இயற்கை எழில்மிகு களுதாவளைப் பதியில் மூர்த்தி,தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமைய பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம்

(17.06.2023) சனிக்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் ஆனி மாதம் 12ம் நாள் (26.06.2023) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு ஆனி உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவத்துடன் இவ்வுற்சவம் நிறைவு பெறவிருக்கின்றது.

இத்தகைய சிறப்புமிகு திருவிழாவினை திறம் பட நடாத்த ஆலய பரிபாலன சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.திருவிழாக்கள் யாவும் பிரதமகுரு சிவஸ்ரீ வி.கு. சிறிஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் நடைபெறும்.ஆலய உதவிக்குரு சிவஸ்ரீ பு.கு. சடாட்சர சர்மா, சிவஸ்ரீ அ. புவிகரன் குருக்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் மேற்கொண்டனர்.

விழாக்காலங்களில் தினமும் பொது மக்கள் ஆதரவுடன் இந்து இளைஞர் மன்றத்தினரின் அன்னதான நிகழ்வு சிறப்பாக இடம் பெற்று வருகின்றன. பொதுமக்களின் போக்குவரத்து வசதி கருதி அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பிலிருந்து தெற்கு நோக்கி ஒரு நீண்ட வழி செல்கின்றது. இவ்வழியில் சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள நீளமான ஒரு கிராமமே களுதாவளையாகும்.

இது 13 ஆம் மைல்கல் தொலைவில் உள்ளது. இவ்வூரும் களுதாவளைப் பிள்ளையார் கோவிலும் மேற்கே வாவிக்கரையும் அதனோடு இணைந்தாற் போல் வயல் நிலப்பரப்பும் கிழக்கே குளமும் குளத்



துக்கு அப்பாலுள்ள நீண்டு செல்லும் இராச பாட்டையும் தெற்கே இக் கோவிலுக்குச் செல்லும் தனிவழிப் பாதையும் வடக்கே வயல் வெளிகளும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ள அழகு மிகு ஆலயமாகும்.

**ஆலய வரலாறு:**

கிழக்கே கடற்கரையையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் அண்டியிருப்பதனால் அது இயற்கையில் எழிலோடு சிறந்து விளங்குகின்றது. பச்சைக்கம்பளம் விரித்தாற் போல் வயல் நிலங்களும் பணவருவாயை அள்ளிக் கொடுத்து இவ்வூரைச் செல்வம் சேர்த்து வைக்கும் வெற்றிலைத் தோட்டங்களும் அழகுபடுத்துகின்றன.

'காலி விளை பாக்கிற்கும் களுதாவளை வெற்றிலைக்கும் ஏலம் கிராம்பிற்கும்'என்பனவாக நாட்டுபுற பாடலில் கிராமியக் கவிஞர் ஒருவர் களுதாவளை வெற்றிலையைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவ்வலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படுகின்றது. இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி களு தேவாலயக் கல்வெட்டு எடுத்தியம்புகின்றது. இவ்வாலயம் அமைந்துள்ள பகுதி வனப்பகுதியாக இருந்தது.

வேடுவ தலைவனாக களுவன் என்பவன் வேட்டையாடும் பொருட்டு இங்கு வந்தான். காரியம் வெற்றி அடையும் பொருட்டு இறையருளை நாடி வெற்றிலைச் சடங்கு செய்வதற்கு இவ்விடத்தினை தெரிவு செய்தான்.

சடங்கினை நிறைவேற்றி இறையருளும் பெற்றான். இவ்வாறு வேடுவர் தலைவனாக களுவன் வழிபட்ட இடம் களு தேவாலயம் என அழைக்கப்பட்டது. பின்னர் ஊரின் பெயர் களுதாவளை என்று ஆனது.

கதிர்காமத்திருத்தலத்திற்குப் பாதயாத்திரை செல்லும் அடியர்கள் தங்கிச் செல்லும் புண்ணிய பூமியாக இவ்விடம் விளங்குகின்றது. ஒருமுறை யாத்திரை வந்த இலிங்க தாரிகள் இவ்விடத்திலே நிலத்திற்கு மேல் இலிங்கத்தை உயர்த்தி வைக்க முயன்றனர். ஆயின் இலிங்கம் வளந்து நிலத்தினூடாக கீழ் நோக்கிப் பரவியது எனவும்அதனை எடுக்கவியலாத இலிங்கதாரிகள் வியப்புற்று ஆச்சரியமாய் நின்றவேளை செய்தியறிந்து ஒன்று கூடிய மக்கள் கொத்துப்பந்தலிட்டு அதனை வழிபாடு செய்யத் தொடங்கினர் எனவும் கல்வெட்டுக் கூறுகின்றது.

இவ்வற்புத இலிங்கத்தின் மகிமையைக் கேள்வியுற்று அதனை பார்க்க வந்த மணியாள் பூபால வன்னிமை என்பவர் அச்சிவலிங்கத்தில் பிள்ளையார் அம்சம் இருந்ததைக் கண்டுணர்ந்தார். அதனைப் பிள்ளையராக வழிபடுமாறு மக்களை வேண்டினார் அவ்வாறே மக்களும் அத்திருவுருவத்தை சுயம்பு லிங்க பிள்ளையார் எனப் போற்றி வழிபட ஆரம்பித்தனர். கலைவனப்பு மிக்க சிற்பங்களோடும் ஓவியங்களோடும் காட்சியளிக்கும் இந்த ஆலயம் மடாலய வகையைச் சார்ந்தது.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
களுவாஞ்சிகுடி

**தினகரன்**
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 05ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 27

### குறள் தரும் சிந்தனை



களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று

குடிபோதைக்கு அடிமையாகி விட்டவனைத் திருத்த அறிவுரை கூறுவதும், தண்ணீருக்குள் மூழ்கிவிட்டவனைத் தேடிக்கண்டு பிடிக்கத் தீப்பந்தம் கொளுத்திக் கொண்டு செல்வதும் ஒன்றுதான்.

# டெங்கு பரவல் தீவிரமடைவதால் மிகுந்த விழிப்புணர்வு அவசியம்!

நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட கவனம் செலுத்தியுள்ளார். அதனடிப்படையில் நாட்டில் டெங்கு மற்றும் கொவிட்19 பெருந்தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்கவென இரண்டு குழுக்களை கடந்த வாரம் அவர் நியமித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களை உள்ளடக்கிய குழுவொன்றும் சுகாதார இராஜாங்க அமைச்சரான விஷேட மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல தலைமையில் நிபுணர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

விஷேட மருத்துவ நிபுணர் சீதா அரேம்பேபொல தலைமையிலான நிபுணர் குழு கடந்த வாரம் மேல்மாகாண தலைமைச் செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் கூடியுள்ளது. இக்கூட்டத்தில் உரையாற்றிய விஷேட மருத்துவ நிபுணர் அரேம்பேபொல, டெங்கு வைரஸானது இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவரிடம் இருந்துதான் மற்றொருக்கு நுளம்பினால் பரப்பப்படுகிறது. அதனால் தற்போதைய சூழலில் அனைத்து காய்ச்சல் நோயாளர்களையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். இது தொடர்பில் மக்களை விரைவாக அறிவூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஊடகங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும்' என்றுள்ளார்.

நுளம்புகளால் காவிப்பரப்படும் நோய்களில் ஒன்றாக டெங்கு நோய் விளங்குகிறது. இவ்வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகள் மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகும் பண்பை கொண்டிருக்கின்றன. அதனால் தற்போதைய மழையுடன் கூடிய காலநிலை இந்நுளம்புகளின் பெருக்கத்திற்கு நல்ல சாதகமானதாக அமைந்திருக்கின்றது.

குறிப்பாக கைவிடப்பட்ட டயர், சிரட்டை, யோகட் கப், பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்கள் உள்ளிட்ட மழைநீர் தேங்கும் திணமக்கழிவுப் பொருட்கள் இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு பெரிதும் உதவக்கூடியனவாகும். இவ்வாறு பெருகும் நுளம்புகள் டெங்கு வைரஸ் நோய்க்கு உள்ளாகியுள்ள நபரைக் குத்துவதன் ஊடாக இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும். அதன் ஊடாகவே அந்நுளம்பு சுகதேகிகளுக்கு டெங்கு வைரஸை பரப்புகின்றது. இவ்வைரஸ் பரவுவதற்கு வேறு மார்க்கங்கள் இல்லை.

இந்நிலையில் விஷேட மருத்துவ நிபுணர் சீதா அரேம்பேபொல, தற்போதைய சூழலில் காய்ச்சல் நோய் அறிகுறியைக் கொண்டிருக்கும் அனைத்து நோயாளர்களையும் நுளம்பு குத்துவதில் இருந்து பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கின்றார்.

இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் அக்கறை கொள்ள வேண்டும். இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு வெவ்வேறு விதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் நுளம்புகளிலிருந்து நோயாளர்கள் உட்பட அனைவரையும் பாதுகாத்துக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் இந்நோயைக் கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரக்கூடியதாக இருக்கும்.

டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகள் பெருகினாலும், அவற்றுக்கு இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நபரைக் குத்த வாய்ப்பு கிடைக்க வேண்டும். அப்போது தான் இவ்வைரஸைப் பரப்பும் வாய்ப்பை இவ்வின நுளம்புகள் பெற்றுக்கொள்ளும். இல்லாவிட்டால் இந்நுளம்பினால் இவ்வைரஸை பரப்ப வாய்ப்பு கிடைக்கப்பெறாது.

இதேவேளை, நாட்டில் 67 மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகள் டெங்கு பரவுதல் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமைகளைக் கருத்தில் கொண்டு டெங்கு வைரஸை காவிப் பரப்பும் நுளம்புகள் பல்கிப் பெருக வாய்ப்பில்லாத வகையில் வீட்டையும் சுற்றுச்சூழலையும் நீர் தேங்க முடியாதபடி சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக்கொள்ள வேண்டும். இதில் கூடுதல் அக்கறை எடுத்துக்கொள்ளத் தவறலாகாது.

அதனால் வீட்டிலும் சுற்றுச்சூழலிலும் சேருக்கின்ற கைவிடப்பட்ட திணமக்கழிவுப் பொருட்களை மழைநீர் தேங்க முடியாதபடி முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்த வேண்டும். அத்தோடு காய்ச்சல் அறிகுறிகளைக் கொண்டுள்ளவர்களை நுளம்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும். அப்போது டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் பெரிதும் வீழ்ச்சி அடைந்துவிடும். அத்தோடு இவ்வைரஸ் அச்சுறுத்தலாகவும் இராது.

ஆகவே டெங்கு வைரஸ் தொற்றைத் தவிர்த்துக் கொள்வதிலும் இந்நோயைக் கட்டுப்படுத்திக் கொள்வதிலும் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்த வேண்டும். டெங்கு தவிர்ப்புக்கான விழிப்புணர்வுடன் செயற்படும் போது இந்நோயின் அச்சுறுத்தல் நிச்சயம் வீழ்ச்சி அடையும். அதுவே கடந்த கால அனுபவங்களாகும். அதனால் அதற்கேற்ப செயற்படுவதே இன்றைய தேவையாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

## கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராய்வு

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளார்.

வட்டுவாகல் பிரதேச கடற்றொழிலாளர்களின் மீன்பிடி இறங்குதுறைக்குச் செல்வதற்கு பொருத்தமான வீதியைப் புனரமைத்து கடற்றொழிலாளர்களின் பாவனைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் கடற்கரை வீதி இராணுவ முகாம் பகுதிக்குள் காணப்படுவதால் கடற்றொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். இதுதொடர்பாக கடந்த 17.06.2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதியுடன் கடற்றொழில் அமைச்சர் கலந்துரையாடிய நிலையில், வட்டுவாகல் இறங்குதுறைக்கான கடற்கரை வீதி முழுமையாக விடுவிக்கப்படும் வரையில், தற்காலிக ஏற்பாடாக பாடசாலை வீதியைப் புனரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர், பாதையை புனரமைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

அத்துடன், வட்டுவாகல் சப்தகன்னி (கண்ணகி அம்மன்) ஆலயத்தின் தீர்த்தோற்சவ காலத்தில் பாரம்பரிய வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற தெய்வீகத் தன்மை வாய்ந்த வேப்பமரப் பிரதேசம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் மீண்டும் மக்கள் பாவனைக்கு முழுமையாக திறந்து விடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசம் கடந்த காலத்தில் இராணுவ முகாம் வளாகத்தினுள் அமைந்திருந்த நிலையில், பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி குறித்த இடத்தை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதேபோன்று, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. குறிப்பாக, சட்டவிரோத தொழில்முறையான வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடிப்பதை கட்டுப்படுத்தும் வகையில் ஆரோக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இந்த வருடத்தில் சுமார் 38 படகுகளை கைப்பற்றி நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தியிருப்பதாகவும் கடற்றொழில் திணைக்களத்தினர் தெரிவிக்கின்ற போதிலும் வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடிப்பதை நூற்றுக்கணக்கான மீன்பிடிப் படகுகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக கடற்றொழில் சங்க பிரதிநிதிகளினால் குற்றஞ்சாட்டப்பட்டது.





அதேபோன்று, நந்திக்கடல், நாயாறு போன்ற களப்பு பகுதிகளிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத தொழில்முறைகள் காரணமாக சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

சட்டவிரோத தொழில்முறைகள் தொடர்பாக இந்த வருட இறுதிக்குள் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டவர்த்தமானியை வெளியிடுவதற்கானபணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், நாயாறு, நந்திக்கடல், சாலை போன்ற களப்பு பகுதிகளை துப்புரவு செய்வதற்கான அனுமதிகள் தேவையான திணைக்களங்களில் இருந்து கிடைத்திருப்பதனால் சுத்தப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்துமாறு கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கரைவலை தொழில் மேற்கொள்வதற்கான இடங்களை அளவீடு செய்து, அவை சரியானவர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

கரைவலைத் தொழிலில் வின்ஞ் எனப்படும் சுழலி பயன்படுத்துவதற்கு அனுதிக்கப்படுகின்ற போதிலும், வின்ஞ் பொருத்தப்பட்ட உழவு இயந்திரங்கள் ஒரு இடத்தில் நிலைத்து நின்றே செயற்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கடற்றொழில் திணைக்களத்தினர் மற்றும் கடற்படை, இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஊடகப் பிரிவு: கடற்றொழில் அமைச்சர்)

# இலங்கை முஸ்லிம்களின் கல்விக் கனவை நனவாக்கி பொன்விழா காணும் கல்விநிறுவனம் ஜாமிஆ நளீமியா

இலங்கை முஸ்லிம்களின் கல்வி மற்றும் ஆத்மீக, சமூக, கலாசார எழுச்சியில் பெரும்பங்கு வகிக்கும் ஒரு கல்வி நிறுவனமாக பேருவளை ஜாமிஆ நளீமியா திகழ்கின்றது. பொன்விழா கொண்டாடும் நளீமியா இன்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் நாட்டில் வாழ்ந்த உலமாக்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள், சமூக சிந்தனையாளர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்காக இவ்வாறான ஒரு கல்வி நிறுவனமொன்று இருக்க வேண்டும் என்ற கனவு கண்டார்கள். இந்தக் கனவினை ஒரு சாதாரண மனிதராக இருந்து வறுமை காரணமாக கல்வி அறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இழந்திருந்த மர்ஹும் நளீம் ஹாஜியார் மூலம் நிறைவேற்றித் தரமுடிந்தது.



ஏ.எம்.மகூத் ஆலிம், கலாநிதி பதியுத்தீன் மஃமூத், எம்.எம். தாஸீம் நத்வி, கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு இவ்வாறானதொரு கல்வி நிறுவனமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார்கள். 1973 ஆம் ஆண்டு மிகச் சிறிய அளவில் 20 மாணவர்களை உள்வாங்கி நளீமியா உருவாக்கப்பட்டது.

இன்று வருடாந்தம் 60 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படும் ஒரு கல்லூரியாக இது வளர்ச்சி கண்டுள்ளது. 1500 இற்கும் மேற்பட்ட ஆளுமைகளை நளீமியா இதுவரை உருவாக்கியுள்ளது. நளீமியா இதுவரை 27 கலாநிதிகளை உருவாக்கியுள்ளது. இலங்கை நிர்வாகத்துறை, வெளிவிவகார சேவை, கல்வித்துறை போன்றவற்றில் நளீமியா உருவாக்கிய பலர் இன்று முக்கிய இடங்களை வகித்து வருகின்றார்கள். தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தல் ஆணையாளர் நாயகமாக நளீமியா ஒருவர் தெரிவானது நளீமியாவின் இந்த ஐந்து தசாப்த பயணத்துக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

ஐம்பது வருட நளீமியாவின் கல்விப் போதனையில் முதல் மூன்று வருடங்கள் நாட்டின் பிரதான மொழிகளைப் போதிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற பல மொழிகள் பேசும் ஒரு நாட்டுக்கு பழமொழி அறிவுள்ளவர்கள் பெருமளவில் தேவைப்படுகின்றார்கள். மொழி அறிவு மிக்கானவர்களை உருவாக்குவதில் அறிவுமிக்கவர்களை உருவாக்குவதில் நளீமியா சிறப்பான பங்களிப்பை இன்னும் செய்து வருகின்றது.

உலகின் பிரதான மொழிகளில் ஒன்றான அரபு மொழி ஆற்றலுள்ளவர்களை நளீமியா உருவாக்கியுள்ளது. அரபு இஸ்லாமிய நாடுகளின் தூதுவராலயங்களில் இவர்கள் பல்வேறு பதவிகளை வகித்து வருகின்றார்கள். அதேபோன்று அரபு நாடுகளில் இலங்கைத் தூதுவராலயங்களிலும் நளீமீக்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இஸ்லாம் தொடர்பாக இருந்த மூடநம்பிக்கைகளைக் களைவதில் நளீமியாவுக்கு முக்கிய பங்கு உண்டு. முஸ்லிம் உலகளுடன் குறிப்பாக முஸ்லிம் அறிஞர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதில் நளீமியாவுக்கு சிறப்பான பங்களிப்புண்டு. காலத்துக்கு காலம் அதன் முக்கிய நிகழ்வுகளுக்கு உலக முஸ்லிம் அறிஞர்கள் அழைக்கப்படுகின்றதனால் அவர்களுடைய தொடர்பு இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் கிடைக்கின்றது.

நளீமியாவின் முக்கிய பாடத்திட்டமாக இஸ்லாமிய கற்கைநெறிகளோடு சேர்ந்து மாறிவரும் சூழலுக்கேற்ப நவீன கற்கை நெறிகளும் உள்ளடங்கியிருப்பதனால் நளீமியா உருவாக்கிய ஆலிம்கள் விமர்சன ரீதியான பல விடயங்களை நோக்குகின்றனர். நளீமியாவின் போதனைகள் நடுநிலைச் சிந்தனையை ஊக்குவிப்பதனால் நளீமியா பட்டதாரிகளுக்கு சமூகத்திற்கு தலைமைத்துவம் வழங்கும் ஆற்றலை வழங்க முடிகின்றது.

நளீம் ஹாஜியார் அவர்கள் இந்த நளீமியாவைக் கட்டியெழுப்புவதற்காக இரண்டு முக்கிய பிரதான பணிகளைச் செய்தார். அக்காலத்தில் நாட்டின் மூத்த முன்னோடி புத்திஜீவியாக இருந்த கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி அவர்களைத் தேர்ந்தெடுத்து அதன் பொறுப்பினை ஒப்படைத்தார். அவருடைய சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் நளீமியா இன்று இந்த அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. அத்தோடு, நளீமியாவைத் தொடர்ந்தும் இயக்குவதற்கான நிரந்தர வருமான வழிகளை நளீம் ஹாஜியார் உருவாக்கியுள்ளார்.

நளீமியா இன்று இந்நாட்டின் பல்கலைக்கழக மட்டத்திற்கு உயர்ந்துள்ளது. மதிக்கப்படுகின்ற உயர்கல்வி நிலையமாக நளீமியா உயர்ந்திருக்கின்றது. சமூகச் சிந்தனை மிகு அஷ்ஷெய்க் அகார் முஹம்மதுடைய தலைமையில் இன்று நளீமியா அதன் அடுத்த தசாப்த பயணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

**என். எம். அமீன்**
தலைவர், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா

# உள்ளூராட்சிமன்ற முன்னாள் பெண் அங்கத்தவர்கள், திட்டநடைமுறை பங்குதாரர்கள் பங்கேற்ற செயலமர்வு

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக இருந்த பெண்களுக்கும், திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பங்குதாரர்களுக்குமிடையிலான செயலமர்வு அண்மையில் அம்பாறை விருந்தினர் விடுதியில் இடம் பெற்றிருந்தது.

சேர்ச் போ கொமண் கிறவுண்ட நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளரும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டாளருமான எம்.ஐ.எம்.சதாத் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக பெண்களினால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. இத்திட்ட முன்மொழிவுகளில் நிகழ்ச்சித் திட்ட தயாரிப்பு, குறிகாட்டிகள் தொடர்பாக திட்ட முகாமையாளர் எம்.ஐ.எம்.சதாத் தெளிவுபடுத்தியிருந்தார்.



பரிந்துரைகள் தொடர்பாக வளவாளர் றெமோ சிஹான் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களினால் தயாரிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகள் பலதரப்பட்ட பங்குதாரர் குழு உறுப்பினர்களான பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களது கருத்துகளும் உள்வாங்கப்பட்டன.

மேற்படி இச்செயலமர்வினை சேர்ச் போ கொமண்ட் கிறவுண்ட் நிறுவனம் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# ஒருவருட நிறைவில் 'எய சுரக்கின AIA

AIA இன்சூரன்ஸ் அண்மையில் தனது பெண்கள் திட்டமான 'எய சுரக்கின AIA' இன் ஓராண்டு நிறைவை IFCDFAT இன் பணியில் பெண்கள் திட்டக் கூட்டாண்மையுடன் இணைந்து மிகவும் விமரிசையாகக் கொண்டாடியிருந்தது.

நாடு முழுவதும் உள்ள பெண்களை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (IRCSL) பணிப்பாளர் நாயகம் தமயந்தி பெர்னாண்டோவின் ஆதரவுடன் AIA இன்சூரன்ஸின் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர, இலங்கை மற்றும் மாலைதீவு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் (IFC) நாட்டுக்கான சிரேஷ்ட அதிகாரி விக்டர் அந்தோணிப் பிள்ளை, மற்றும் ஐகுஊ இன் பணியில் பெண்கள் திட்டத்தின் முகாமையாளர் டிவிக், AIA, IFC, கொமர்ஷல் பேங் ஒவ் சிலோன், மற்றும் பெண்களுக்கான தொழில் மற்றும் வர்த்தக சபை ((WCIC)) ஆகியவற்றின் முக்கிய தொழில் நிபுணர்களையும் இந்நிகழ்வு ஒன்றிணைத்திருந்தது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீரவின் உரையுடன் இந்நிகழ்வு ஆரம்பமானதுடன், அவர் இத்திட்டத்தின் முக்கிய சாதனைகளையும் எடுத்துரைத்திருந்தார்.




மேலும் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை முழுவதும் 2,000,000 பெண்களைச் சாதகமாக ஈடுபடுத்தும் 'எய சுரக்கின AIA இன் எதிர்காலத்திற்கான நிறுவனத்தின் நோக்கினையும் இதன்போது சத்துரி பகிர்ந்து கொண்டிருந்தார்.

பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்தல், பெண்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பணியிடங்களை உள்ளடக்கிய கலாசாரத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றில் AIA இன் சாதனைகள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதில் இதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்குச் சான்றாகும். கற்றல், ஆட்சேர்ப்பு, வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் நாடு முழுவதும் உள்ள பெண்களின் முழுத் திறனையும் தனிப்பட்ட முறையில் மற்றும் தொழில் ரீதியாக அடைவதில் இந்த திட்டம் உறுதிபூண்டுள்ளது.



ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய நிர்வாகமும், இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய பண்ணிசைக் கருத்தரங்கு அண்மையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தேவார இசைப் பேராசிரியர் முனைவர் பாலச்சந்தர் திருஞானசம்பந்தர், மற்றும் தமிழ் நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழக பண்ணிசை விரிவுரையாளர் கலாநிதி சிவகௌரி இருவரும் பண்ணிசை கருத்தரங்கை நடத்தினர். அதன் பின் இவர்கள் ஆலய நிர்வாகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# பாண், பேக்கரி உற்பத்தி பொருட்கள் விலை குறைப்பு

## பேக்கரி உரிமையாளர் சங்கம் நம்பிக்கை



பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது. முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக குறைக்கப்பட்டு, கோதுமை மாவி'ன விலையும் குறைக்கப்பட்டால் இவ்வாறு பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள கோதுமை மா இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் செயற்பட வேண்டுமென அதன் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார். கோதுமை மா இறக்குமதியை நிறுத்தாமல் ஒரு கிலோ மாவின் விலை 180 முதல் 170 ரூபா வரை குறைக்கப்பட்டிருந்தால், ஒரு றாத்தல் பாணின் விலை 10 ரூபாவுக்கு மேல் குறைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு KKS...

ஆரம்பிக்கப்படவுள்ளது.

அநுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் வீதிகள் திருத்தப்பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் மூடப்பட்டது. 62 கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்த ரயில் பாதைகள் இந்திய கடன் உதவியின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.புனரமைக்கப்பட்ட ரயில் பாதையில் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நயினாதீவு...

இந்த நிலையில் நேற்று ஆலய வீதியில் மூன்று நாகங்கள் வலம் வந்து படம் எடுத்து காட்சி கொடுத்துச் சென்றது.

இந்நிலையில் ஆலய திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் அம்மனை நாடிவந்த நாகங்கள் பக்தர்களுக்கு காட்சி அளித்து சென்றுள்ளமை அன்னையின் அருளை எடுத்தியம்பி நிற்கின்றது.

அதேவேளை நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு வருடா வருடம் மகோற்சவத்திற்கு முன்னர் அம்பாள் நாகவடிவில் காட்சி கொடுப்பார் என்பதும் காலங்காலமாக இடம்பெறுவது வழமை என நயினை அம்மன் பக்தர்கள் கூறுகின்றனர்.

## கோதுமை மாவின் விலை...

கோதுமை மா இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் டொலரின் பெறுமதிக்கு அமைய கோதுமை மாவின் விலை தீர்மானிக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பெரும்பாலான வெதுப்பகங்கள் அதிக விலைக்கே தொடர்ந்தும் பொருட்களை வழங்குவதாக உணவக உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதன் காரணமாக உணவகங்களில் உணவு பொருட்களின் விலையை குறைக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## வெளிநாட்டு கடவுச்சீட்டு....

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

இங்கு தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பதாரரின் வீட்டிற்கு வழங்கப்படும் எனவும் கட்டுப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெறுவதற்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் விண்ணப்பப் படிவம் சரிபார்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.மேலும் பிரதேச செயலகங்கள் ஊடாக நாளாந்தம் சுமார் 765 பேர் கைரேகைகளை பெற்றுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்சாரம், பெற்றோலியம்,....

அதன்படி, மின்சாரம் வழங்கல், பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம், மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்கள், நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பராமரிப்பு, உணவு மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து சேவைப் பணிகள் அல்லது உழைப்பு தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகும்.

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கும் இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்த சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொரலஸ்கமுவவில் ...

சந்தேக நபர்களுடன், இரண்டு தேசிய அடையாள அட்டைகள், ஒரு கடவுச்சீட்டு, ஒன்பது தற்காலிக சாரதி அனுமதிப்பத்தரம், நான்கு அடையாள அட்டைகள், போலி தற்காலிக ஓட்டுநர் உரிமம் அச்சிடத் தயாரிக்கப்பட்ட தரவுகள் அடங்கிய கணினி மற்றும் 5 250 மில்லிகிராம் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்காலத்தில் வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கே சாரதி அனுமதி அட்டைகள் வழங்கப்படுவதுடன், அதனை முன்னிறுத்தி மிக அதிக விலைக்கு சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தற்காலிக அனுமதிப்பத்திரம் விற்பனை செய்யப்படுவதாக நுகேகொட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய பொரலஸ்கமுவ வெரஹெர மோட்டார் திணைக்களத்திற்கு முன்னால் உள்ள ஓட்டுநர் பாடசாலையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தூர பிரதேசங்களில் இருந்து வருபவர்களிடம் சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிப்பதற்கு 25,000 ரூபாவும், தற்காலிக அனுமதிப்பத்திரம் தயாரிப்பதற்கு 15,000 ரூபாயும் அறவிடப்பட்டுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## சமூக வலைத்தளங்களில்...

டபிள்யூ.பி. ஜெயநெத்சிறி தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை (16) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் விளம்பரங்கள் மூலம் மக்களை ஏமாற்றி பண மோசடி செய்யும் சம்பவங்கள் நாட்டில் தற்போது சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது.

இவ்வருடம் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் பதிவாகிய இத்தகைய சம்பவங்களின் எண்ணிக்கை 108 ஆகும். கடந்த இரண்டரை வருடங்களில் இணைய குற்றங்கள் தொடர்பில் 9,000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கொவிட் தொற்று காரணமாக நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதன்படி, 2021ஆம் ஆண்டு இணைய குற்றங்கள் தொடர்பாக 4,688 முறைப்பாடுகளும், 2022ஆம் ஆண்டில் 3,168 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றன.

இவ்வருட காலப்பகுதியில் 1,187 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளில் 75 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## கொரோனா மீண்டும்...

மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைக்கு பாதிப்புகள் அதிக அளவு இல்லாததால் கொரோனா அவசரநிலையில் இருந்து மட்டுமே நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.இந்த தொற்று இனிவருங்காலங்களில் தீங்கு விளைவிக்கும் விகாரங்களாக மாறி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக மேலும் ஒரு கொரோனா அலை உருவாகலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

## கிழக்கு பல்கலை...

சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

அடிப்படைத் தத்துவம், குணபாடம், நோய் நாடல் மற்றும் சிகிச்சை ஆகிய மூன்று கற்றல் துறைகள் சித்த மருத்துவ பீடத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

## பாகிஸ்தான் கப்பல்....

'திப்பு சுல்தான்' யுத்தக் கப்பல் 168 பேருடன் இலங்கை வந்துள்ளதுடன் அதன் நீளம் 134.1 மீற்றராகும்.

பாகிஸ்தான் கடற்படை கெப்டன் ஜவாத் ஹுசைன் தலைமையில் வருகை தந்துள்ள இந்த கப்பல் இரண்டு நாட்கள் இலங்கையில் தரித்திருப்பதுடன் நாளை 20 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ளது.

இந்தக் கப்பல் இலங்கையில் தரித்திருக்கும் இரண்டு தினங்களிலும் இரண்டு நாடுகளினதும் கடற்படையினருக்குமிடையே நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## டெங்கு பரவும்...

பொது சுகாதார பரிசோதகர் இதனை குறிப்பிட்டார். மேலும் அங்கு கருத்து தெரிவித்த நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் அஜித் விதானகே. “அந்த தொலைபேசி எண் மூலம் 24 மணி நேரமும் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த நேரத்தில் தீர்வுகளை வழங்கக் கூடியவர்களுக்கு தீர்வுகள் வழங்கப்படும். சில பிரச்சனைகளுக்கு 3 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு பரவும் வகையில் கைவிடப்பட்ட காணிகள் இருந்தால், அது பாதுகாப்பற்றதாக உள்ளதென சுகாதார வைத்திய அதிகாரி அடையாளம் கண்டால், அந்த நிலங்கள் கையகப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## துபாயில் வேலைபெற்றுத் ...

கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் துபாயில் வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக தெரிவித்து இரண்டரை இலட்சம் ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் என மூவரிடம் இருந்து பணத்தை பெற்றுள்ளார்.

இவ்வாறு நிதி மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் கலகெதர மற்றும் அக்குறணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் குறித்த நபர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் துபாய் தூதரகத்துடன் தொடர்பு கொண்ட போது அந்த மூன்று விசாக்களும் போலியானவை என்பதும் தெரியவந்துள்ளது.

எனவே, இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வங்கிகள், நிதி...

சந்திப்புகளின் போது அது தொடர்பிலான இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் பதில் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்கமானது வங்கிகள் மற்றும் நிதி பிரிவுகளின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பேசிய கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டின் உத்தியோக பூர்வ கையிருப்பை தொடர்ந்தும் பேணும் வகையில் வெள'நாட்டு அந்நியசெலாவணி நாட்டிலிருந்து வெளியில் செல்வதை தடுக்கும் வகையில் அதனை ஆறு மாதங்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆறு மாத காலத்திற்கு வெளிநாட்டு அந்நிய செலாவணி நாட்டிலிருந்து வெளியே செல்வதை மட்டுப்படுத்தும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உண்மை, நல்லிணக்க...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதற்கு முன் அது தொடர்பான விடயங்கள் இராஜதந்திர வட்டாரங்கள் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனும் பகிர்ந்துகொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53வது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் இலங்கையின் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் இன்றைய தினம் வாய்மூல அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டக்களப்பில் 07பேர் ...

செய்துள்ளனர். குறித்த சந்தர்ப்பத்தில் 6 சண்டை கோழிகள் மற்றும் ஒரு தொகை பணம் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நாவலடி பிரதேசத்தை சேர்ந்த 26 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களே என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய நீர்மூழ்கிக்....

நீர்மூழ்கிக் கப்பல் இலங்கைக்கு இன்று வருகை தருவதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

வாகீர் என்ற பெயரைக் கொண்ட இந்த இந்திய நீர்மூழ்கிக் கப்பல் இன்றைய தினம் முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இலங்கையில் அதன் செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இந்திய நீர்மூழ்கிக் கப்பலின் கட்டளை அதிகாரி மற்றும் மேற்கு கடற்படைக்கு பொறுப்பான கட்டளை அதிகாரி ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி நீர்மூழ்கிக் கப்பலை பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பார்வையாளர்களின் காட்சிப்படுத்தலுக்காக திறந்து விடவும் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஐந்தாவது இளைஞர்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சராகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்தனவினால், இந்த அமைதியின்மை நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான சட்டங்களை தயாரிக்கும் அதேநேரம் அதிலிருந்து விடுபடுவதற்கான பரிந்துரைகளையும் முன்மொழிந்தார். குறிப்பாக இளைஞர்களை இதிலிருந்து விடுவிப்பதும், இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பதுமே அவரது நோக்கமாக காணப்பட்டது.

1967ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க சட்டமூலத்தை அப்போதைய அமைச்சராக இருந்த ஜே. ஆர். ஜயவர்தனவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நாம் அனைவரும் அறிந்த அந்த சபையில் தான் இன்று நாம் கூடியிருக்கிறோம் .

அந்தச் சட்டம் இளைஞர் ஆற்றலை தேசிய வளர்ச்சிக்கு வழிநடத்த முன்மொழியப்பட்ட தொண்டர் இளைஞர் சேவைச் சட்டம் ஆகும். அதன்படி, இந்த சட்டமூலம் இந்த இடத்தில் ஆராயப்பட்ட சட்டமூலமாகும்.

# அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் புதிய இ போ ச பஸ் சேவை ஆரம்பித்து வைப்பு



காலி வீதி, ஹொரண கொழும்பு பிரதான வீதி மற்றும் ஹைலெவல் வீதியை இணைக்கும் வகையில் புதிய இ போ ச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையின் மொரட்டுவ மற்றும் இரத்மலானை டிப்போ மூலம் காலி வீதி, ஹொரண கொழும்பு பிரதான வீதி மற்றும் ஹைலெவல் வீதிகளை இணைக்கும் வகையில் கொழும்புக்குள் பிரவேசிக்கும் பயணிகளின் வசதிக்காக இரத்மலானை புகையிரத நிலையத்தில் இருந்து மஹரகம மற்றும் கல்கிசை, பொருபன, வெரஹெர, கொட்டாவ ஆகிய பகுதிகளுக்கு புதிய பஸ் சேவை ஆரம்பிக்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

## கொழும்பில் விரைவில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நகரில் மின்சாரத்தில் இயங்கும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம்.

எரிபொருளின் உபயோகத்துடன் மேற்கொள்ளப்படும் பஸ் போக்குவரத்து சேவை காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் மாசை தடுப்பதற்கு இந்த முறைமை உறுதுணையாக அமையும்.

எரிபொருள் மிக அதிகரித்து காணப்படுவதுடன் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு பொது போக்குவரத்து சேவையை மின்சாரத்தில் இயங்கும் பஸ்கள் ஊடாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பஸ் வண்டிகள் மட்டுமன்றி முச்சக்கர வண்டிகள் வான்கள் அதனையடுத்து எதிர்காலத்தில் ரயில் சேவைகளையும் அவ்வாறு மின்சாரத்தில் இயங்கச் செய்யும் வகையில் மாற்றம் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த வருட இறுதிக்குள் தனியார் துறையின் ஒத்துபழைப்புடன் மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை சந்தைக்கு விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபை வசமுள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் நட்டமீட்டும் பஸ் டிப்போக்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில் இலங்கை போக்குவரத்து சபையை வர்த்தக நிறுவனமான முன்னெடுப்பதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் தூரநோக்கு... 03ஆம் பக்கத் தொடர்

பயணிப்பதற்கான வழிவகைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுபோன்று மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்குள்ளான உலகத்தின் வேறு எந்த நாடும் இன்னும் சரியான வகையில் தலைதூக்க முடியாமலுள்ளன. எனினும் ஜனாதிபதியின் சிறந்த தூரநோக்கே நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிதி மோசடி செய்த... 03ஆம் பக்கத் தொடர்

இந்திய பிரஜையை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மேலும் 800... 03ஆம் பக்கத் தொடர்

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு தற்போது 1.6 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது என்று குறிப்பிட்டார். இது ஒரு வருடத்திற்கு முன்பு வெறும் 200 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

படிப்படியான பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டின் வெளிநாட்டு இருப்புக்களை மேலும் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களால் கட்டியெழுப்பும் இலக்கை இலங்கைக்கு வழங்கியுள்ளது. வாகனங்கள் மீதான இறக்குமதி தடையை தளர்த்துவது, வெளிநாட்டு கையிருப்பில் ஏற்படும் சேதம் காரணமாக இன்னும் சாத்தியமில்லை என்று கூறினார்.

இந்த சூழ்நிலையில், திறைசேரி அத்தகைய திட்டங்களில் மிகவும் அத்தியாவசியமானவற்றைத் தவிர மற்ற அனைத்தையும் குறைந்தபட்சம் டிசம்பர் வரை நிறுத்தி வைத்துள்ளது. மேலும், 10 பில்லியனுக்கும் மேலான அனைத்து திட்டங்களும் காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டில் கடன் மறுசீரமைப்பு முடிவடையும் வரையும் அரசாங்கம் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பதற்கான தெளிவு பெறும் வரையும், எதிர்கால வேலைத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்படும் என்று திறைசேரி அதிகாரி தெரிவித்துள்ளார்.

## ஐ.நா மனித உரிமைகள்...

51ஆவது கூட்டத்தொடர் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமானதுடன், அன்றைய தினமே இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டின் எழுத்துமூல அறிக்கை வாசிக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி, அக்கூட்டத் தொடரில் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்பட்ட 51/1 என்ற புதிய தீர்மானம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது கூட்டத் தொடருக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான விசேட தீர்மானங்களோ அல்லது விவாதங்களோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகி, எதிர்வரும் ஜுலை மாதம் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடரில் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை ஜெனிவா நேரப்படி பி.ப 3 மணிக்கு இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல உரை இடம்பெறவுள்ளது.

இதன்போது 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற 51/1 தீர்மானத்தின் பிரகாரம், நாட்டின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன மனித உரிமைகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் ஈரான் மற்றும் நிகரகுவா ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து முறையே எழுத்துமூல அறிக்கை மற்றும் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல அறிக்கை என்பனவும் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் மருத்துவ பீடம்

**கலாநிதி ஐ.எல். றிபாஸ்**



ஒலுவில் விசேட நிருபர்

தென்கிழக்கு பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்தில் சகல வசதிகளும் கொண்ட மருத்துவ பீடம் அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல். றிபாஸ் தெரிவித்தார்.

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனை கிளையின் வருடாந்த மாநாடும், சேவை நலன் பாராட்டு வைபவமும் அக்கரைப்பற்று மாநகர சபை ஹஜ்ஜால் மண்டபத்தில் சங்கத்தின் கல்முனைக் கிளையின் உப தலைவர், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம். எஸ்.எம். அப்துல் மலீக் தலைமையில் சனிக்கிழமை (17) நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,..

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைப்பதற்கு சவூதி அரசாங்கம் முன்வந்துள்ளது. இதற்கான திட்ட வரைபுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

நாட்டில் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் என்பன ஒன்றிணைந்து இயங்க வேண்டும். அப்போதுதான் எமது செயற்பாடுகளை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என்றார்.



இலங்கைக்கான அமெரிக்க தூதரக பொருளாதார நிபுணர் (ESTH) joevini Machado (16) வெள்ளிக்கிழமை மரியாதையின் நிமித்தம் ஆளுநர் செயலகத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## 'முப்பது வருடங்களாக தொடரும் காணிப் பிரச்சினைக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும்'

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

காணிகள் விடயத்தில் சகல சமூகத்தாரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தீர்வின்றித் தொடரும் இந்தக் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என நிஹால் அஹமட் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக விழிப்புணர்வூட்டல் செயலமர்வு ஒலுவில் தனியார் விடுதியில் சனி, ஞாயிறு (17,18) இரு தினங்கள் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காணி உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து பேசிய அவர்,.

காணிப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கும் தேசிய காணி கொள்கைக்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் இந்தக் கலந்துரையாடல் வாய்ப்பளிக்கும்.

திட்டமிட்ட நிலப்பறிப்புக்களால் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 4652 குடும்பங்களின 14127 ஏக்கர் பரப்பளவான காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் பாதிப்புக்கள் உள்ளன. இது விடயமாக கடந்த காலங்களில் பல முன்னெடுப்புக்கள் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்தார்.



## அட்டாளைச்சேனையில் கஞ்சா வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 25000 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப் பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபரை கைது செய்து நேற்று முன் தினம் (17) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேக நபருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலை மாவட்ட அனைத்து ஆலயங்களின் விபரங்கள் திரட்டல்

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் தெய்வீக கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களினதும் விவரம் திரட்டும் நிகழ்வானது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங்கம் அனிருத்னன் தலைமையில் (17) திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய சோமாஸ்கந்த மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களின் விபரமும் தெய்வீக கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திரட்டப்பட்டது. மேலும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து நிர்வாக உறுப்பினர்கள், அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர்கள், இந்து அமைப்பினரின் நிர்வாகத்தினர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களுடைய நிர்வாகத்திலுள்ள குறை நிறைகளை பற்றியும் கலந்துரையாடினர்.

## மூன்று சட்டத்தரணிகள் தொடர்பில் முகநூல் பதிவு, பின்னூட்டல் செய்த மூவர் கைது

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் கடமையாற்றும் மூன்று சட்டத்தரணிகள் தொடர்பாக முகநூலில் பதிவினை இட்டமை, பின்னூட்டல் செய்தமை தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டு மூதூர் நீதவான் நீதி மன்றில் (16) ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

போதை மாத்திரை வழக்கொன்று தொடர்பாக தமது தொழில் நிமித்தம் மூன்று சட்டத்தரணிகள் சநதேக நபர் சார்பாக நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். இந்நிலையில் இச்சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகிய விடயத்தை விமர்சித்து முகநூலில் பதிவினை இட்டமைக் காகவும், பதிவுக்கான பின்னூட்டம் இட்டமைக்காகவும் இம் மூவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இம்முகநூல் பதிவு பின்னணியில் இன்னும் 10 இற்கும் மேற்பட்டோர் இருப்பதாகவும் இவர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சி பட்டறை

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான பயிற்சி பட்டறை (17) நடைபெற்றது.

பெண்களின் மேம்பாட்டுக்காக பணியாற்றும் இலங்கை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாக கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான டயகோனியா அனுசரணையில் 'சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைத்தல்' எனும் தொனிப் பொருளில் தமிழ்மொழி மூல ஒரு நாள் பயிற்சி பட்டறை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் சமூக ஊடகங்களில் தங்களது ஆக்கங்களை பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என பல்லின ஆண்கள், பெண்கள் பங்குபற்றுனர்களாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராக பணியாற்றும் கலாநிதி எம்.சி.றஸ்மின் வளவாளராகவும், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம். பைறூஸ் துணை வளவாளராகவும் கலந்து பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்விற்கு இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அஸ்லம் சஜா தலைமை தாங்கினார்.

கருத்து வேற்றுமை, தனியுரிமை, பரபரப்பு, அநாமோதய தகவல் மூலங்கள், சமூக ஊடகம் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக வைத்து இதன்போது வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், சமூக ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் போன்றவற்றின் நெறிமுறைகள் குறித்தான விரிவான விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மேற்படி நெறிமுறைகள் தொடர்பில் பங்குபற்றியோரிடமிருந்து கருந்துகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டமும் வரையப்பட்டது.

## கிழக்கு ஆளுநரின் பணிப்பில் முள்ளிப்பொத்தானையில் நடமாடும் சேவை

தம்பலகாமம் குறூப் நிருபர்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து தம்பலகாமம் பிரதேச செயலகமும் முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்ததாக நடாத்தும் நடமாடும் சேவை சனிக் கிழமை முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர ஹமீதியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டலுக்கிணங்க நடைபெற்ற நடமாடும் சேவையில் இரத்தப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு, பொது வைத்தியசேவை, ஆயுர்வேத வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொதுசன மாதாந்த உதவி கொடுப்பனவு, நோய் உதவி கொடுப்பனவு (புற்று நோய், சிறு நீரக நோய்), மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர், தேசிய அடையாள அட்டை இறப்பு. பிறப்பு சான்றிதழ் தொடர்பான பல சேவைகளும் நடைபெற்றன. இதில் மக்கள் இலவச சேவையினை பெற்றுக் கொண்டனர்.

முள்ளிப்பொத்தானை வடக்கு, சிராஜ் நகர், முள்ளிப்பொத்தானை, முள்ளிப்பொத்தானை கிழக்கு, கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த பொது மக்கள் இதில் நன்மையடைந்தனர்.



கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு புன்னைச் சோலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் தீமிதிப்பு திருச்சடங்கு வெள்ளிக்கிழமை (16) மாலை பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அரோகரா கோசத்துடன் மிக பக்தி பூர்வமாக நடைபெற்ற போது... படம்: பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

## கல்லடியில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

மண்டூர் தினகரன் நிருபர்

கல்லடி பிரதேசத்தில் உள்ள வீட்டிலிருந்து வயோதிபப்பெண் ஒருவர் நேற்று (18) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய முகத்துவார வீதி கல்லடி மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த (76) வயது மூன்று பிள்ளைகளின் தாயாரான றோசம்மா ஞானப்பிரகாசம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனது மகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த மாதம் வெளிநாட்டில் உள்ள சகோதரியை பார்ப்பதற்காக குறித்த வயோதிபதாயாரை தனிமையில் வீட்டுச் சென்றதாகவும் பின்னர் சம்பவ தினத்தன்று நாடு திரும்பிய மகள் தனது வீட்டுக்கு சென்று தாயாரை அழைத்த போது வீட்டின் உட்பகுதியில் துர்நாற்றம் வீசியதையடுத்து வீட்டின் கதவை உடைத்து உட்சென்ற போது வீட்டின் மலசல கூடத்தினுள் உருக்குலைந்த நிலையில் மரணமடைந்து காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தினை பார்வையிட்ட பின்னர் பிரேதத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு பணித்தார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



சம்மாந்துறை நெய்னாகாடு அல்அக்ஸா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வசதியற்ற மாணவர்களுக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிரின் முயற்சியினால் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கில் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு (15) நடைபெற்றபோது,... (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

மட்டு. ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு

## தகவல் அறியும் உரிமை சட்டம் விளக்கமளிக்கும் செயலமர்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிராந்திய ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் 'எமது உரிமைகளை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் விளக்கமளிக்கும் செயலமர்வு (18) ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு ஈஸ்ட்ஸலகூன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இச் செயலமர்வில் வளவாளர்களாக விடிவெள்ளி பத்திரிகை பிரதம ஆசிரியர் எம்.பி.எம்.பைரூஸ் தகவல் அறியும் உரிமையின் அடிப்படையில் கட்டுரைகள் எழுதும் பத்திரிகையாளர்களுக்கான உதவிக் குறிப்புகள் எனும் தலைப்பில் விரிவுரையை நடாத்தியதுடன்

இலங்கை பத்திரிகை ஸ்தாபன திட்ட உதவியாளர் திருமதி ஆர்த்தி இரவிவர்மன் தகவல் அறியும் சட்டம் தொடர்பான கருத்துரையை வழங்கினார்.

இதில் ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூம் சார்ந்த 40 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



குச்சவெளிக் கோட்டத்திலுள்ள கோணேசபுரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பெரியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் தரம் ஐந்து மாணவருக்கு ஒவ்வொன்றும் 1680 ரூபா பெறுமதியான ஞானோதயம் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம்: ரொட்டவெவ குறூப் நிருபர்)

ilங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01 | EOM&M பிரிவின் (CE-H) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமவிலிருந்த யக்காப்பிட்டிய பிரிவு வரையும் சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்கல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **2023.06.19 ஆம் திகதியிலிருந்து 2023.07.10 ஆம் திகதி வரையும் www. rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், EOM&M பிரிவு பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## சீதாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

# கேள்வி அறிவித்தல்

2023.07.01 முதல் 2023.12.31 வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வருடாந்த குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் - 2023.06.27 பி.ப. 3.00 மணி வரை**
**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2023.06.28 மு.ப. 10.00 வரை**
**கேள்விப் பத்திரங்கள் திறத்தல் - 2023.06.28 கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொண்டு முடிவடைந்தவுடன்**

2023.07.01 பி.ப. 3.00 இற்கு முன்பு உடன்படிக்கையொன்றுக்கு வரல் வேண்டும்.

| தொடர் இல. | சொத்து விபரம் | கேள்விப் பிணைத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் | குறைந்த பட்ச கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஹங்வெல்ல இல. 3 ஆட்டு, கோழி இறைச்சிக் கடை | 150,000.00 | 1,500.00 | 304,700.00 |
| 2 | பாதுக்க புதிய சந்தை மீன் கடை இல. 01 | 2,000.00 | 500.00 | 8,400.00 |
| 3 | கொஸ்கம வார சந்தை பன்றியிறைச்சி கடை (செவ்வாய், வெள்ளி, ஞாயிறு) இடம் - வார சந்தை மீன், கடை 42 என்ற இடம் | 5,000.00 | 500.00 | 23,700.00 |
| 4 | அருக்வத்த பொது மயான பூமியின் தென்னை மரம் 5 மற்றும் செவ்விள நீர் மரம் 1 இன் விளைச்சல் | 500.00 | 100.00 | 1,800.00 |
| 5 | பாதுக்க பொது மைதானத்தில் 20' x 12' அளவான கடை அறையை குத்தகைக்குவிடல் | 10,000.00 | 1,000.00 | 147,200.00 |
| 6 | பாதுக்க பழைய வர்த்தக கட்டிடத்தொகுதி இல. 03 கடை அறையை குத்தகைக்கு விடல் | 10,000.00 | 750.00 | 96,600.00 |

இதனோடு சம்பந்தப்பட்ட குத்தகை கோரும் கேள்விப் பத்திரம் மற்றும் கேள்வி அறிவித்தலை 2023.06.27 பி.ப. 3.00 இற்கு முன் தலைமையகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை 036-2255052 ஐ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**கே.ஏ. சந்தன பத்மசிரி**
**செயலாளர் மற்றும் சீதாவக்க பிரதேச சபையின்**
**அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தல் அதிகாரி**
**சீதாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல.**

**2023.06.07ம் திகதி**
**சீதாவக்க பிரதேச சபை அலுவலகத்தில்.**

## பெறுகை அறிவித்தல்

## கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபையின் ஆணையாளரினால் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழ்க்காணப்படும் கைத்தொழில்களிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கைத்தொழில் | தகைமை | மீளளிக்கப்படாத விலைமனுப்படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணையம் | |
